# நறுந்தமிழ்

## பன்னாட்டு ஆய்விதழ்

# International Journal of Narunthamizh

தொகுதி 1 / பகுதி 1 சனவரி 2026

Volume 1 / Issue 1 January 2026

Narunthamizh Ilakkiyapozhi,
Mahalashmi Nagar,Church cross street,Selaiyur,
Chennai, Tamil Nadu -600073.

# International Journal Of Narunthamizh Editorial office


## Office of the Editor – in – Chief

**No. 379 Madha Kovil Street periyappattu, Silambimangalam (po) buvanagiri Tk Cuddalore, Tamil Nadu, India.**

**Tel: 09786864409**

**Email: narunthamizh.com/webmail**

Website: www.narunthamizh.com/current-issues/



## Publisher

**Narunthamizh Ilakkiyapozhi,**

**Mahalashmi Nagar,Church cross street,**

**Selaiyur,Chennai-600073**

**Tamil Nadu, India.**

# Editorial Board 2026 -2029

**Editor in Chife**

## Dr. A. Irudhayaraj

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai - 600117

Tamil Nadu, India.

irudhayaraj.sl@vistas.ac.in 9786864409.

https://erp.vistas.ac.in/evarsitypack/resources/template/frmPageController.jsp

Chife Executive Editor

## Dr.P.Gubendiran

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai - 600117

Tamil Nadu, India.

gubendiran.sl@vistas.ac.in 9962633122.

Associate Editing& Ideating

## Dr. M. ELANGOVAN

M.A.,M.Phil.,Ph.D.,DIL, M.Sc. Psyc.,

Associate Professor, Department of Tamil

R.K.M.Vivekanantha College, Mylapore.Chennai 04.

Mail ID ; elangovan@narunthamizh.com

Mobile No: 9444025197.

Journal Web Design and Technical Support

Mr.S.M. Inbaarusu

Department of Animation

VISTAS, Chennai - 600117

# Editorial Board Members

**Dr. David Stanley**

Assistant Professor& Head

Department of Tamil

Loyola College, Chennai, Tamil Nadu, India.

Mail ID ; davidstanley@loyolacollege.edu

Mobile No: 9840553558

https://vidwan.inflibnet.ac.in/profile/487052

**Dr.S.Priya**

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai – 600117

Mail ID ; priyas.sl@vistas.ac.in

Mobile No: 9962633122.

https://vistas.ac.in/faculty-in-school-of-languages/

**Dr.P. Geetha**

Assistant professor

Department of Tamil,

Nehru Arts and science college (Autonomous),

Thirumalayampalayam, coimbatore -641105. India.

Mail ID ; nascdrpgeetha@nehrucolleges.com

Mobile No: 9788244940.

https://vidwan.inflibnet.ac.in/profile/612159

**Dr.Santhana Karthikeyan**

Associate Professor & head

Department of Psychology PresidencyCollege Chennai-05.

Email ID: santhanakarthikeyanv.psy@presidencycollegechennai.ac.in

Mobile No: 8825937211.

https://pcc.ac.in/Academia/TeachingStaff?departmentCode=Psychology

**Mr. S.Kalaiselvan** M.A., M.Phil.,Ph.D.,

Associate Professor, & head

Department of MFA, VISTAS, Chennai - 600117.

Tamil Nadu State. India.

Email ID: hodanimation@velsuniv.ac.in

Mobile No: 9941168254

https://vistas.ac.in/faculty-in-school-of-mass-communication/

**Prof. K.M. Rohitha Dasanayaka**
Head of the Department,
Acting Dean - Faculty of Arts - University of Peradeniya
Sri Lanka.

Email ID: rohithad@arts.pdn.ac.lk , rohithadasanayaka@narunthamizh.com

Mobile No: **+94713212616**

https://arts.pdn.ac.lk/history/rohitha.html

Dr.P.Nallamuthu
**Assistant Professor**
**Department of Zoology**
**Loyola College, Chennai, Tamil Nadu, India.**
Email ID: nallamuthu@loyolacollege.edu

Mobile No: 9962720255

https://vidwan.inflibnet.ac.in/profile/249545

**K. Mohamed Hidayathullah,**

Dubai.-UAE

Email ID: mohamedhidayathullah@narunthamizh.com

Mobile No: +971-50-5196433.

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
: DOI :

---

## எங்களை பற்றி

அன்புள்ளங்களுக்கு வணக்கம்.

பழமைவாய்ந்த தமிழ் மக்கள் வாழும் தமிழக மண்ணிலிருந்து வெளிவரும் நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் உலக மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது. நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் சனவரி 2026ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இவ்விதழ் ஆண்டுக்கு நான்கு முறை சனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர் ஆகிய திங்களில் வெளிவரும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் இனம் உலகில் தொன்மை வரலாறு பெற்ற இனங்களுள் ஒன்று. இதற்குத் தெளிவான சான்றுகள் பல உண்டு. தமிழக வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்மொழி வரலாறு என இன்று வரை பல அறிஞர் பெருமக்களால் பலவாறு ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்த ஆய்வுகளுக்குத் தமிழக வரலாற்று மூலங்களான இலக்கியங்கள், இலக்கணங்கள், உரைகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், அகழ்வாராய்ச்சிப் பொருட்கள், நாணயங்கள், கலைகள், வெளி நாட்டார்க் குறிப்புகள், ஆவணக்குறிப்புகள், மொழி ஆகியன சான்றாக அமைகின்றன. இவற்றுள் பல மூலங்கள் இன்னும் முழுமையாக ஆராயப்படாத நிலையிலும் உள்ளன. கிடைத்த மூலங்கள் இன்னும் பலக் கோணப்பார்வையில் ஆராயப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும்.

தற்போது உலக அளவில் நமது மொழியினை கொண்டு செல்ல தமிழ் மொழியைப் பற்றியும் தமிழர்களைப் பற்றியும் பல ஆய்வுகள் வெவ்வேறு ஆய்வுக் கோணங்களில் முறையான, நடுநிலையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இன்று தோன்றியுள்ள பலவகையானத் துறைகளோடு இணைந்து ஆராயப்பட வேண்டியதும் கட்டாயமாகிறது. அதற்கான சிறு முயற்சியில் உங்களையும் பங்கெடுத்துக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் தமிழ் ஆய்வோடு பிற துறைகளையும் ஒப்பீட்டு பார்த்து தொடர்புபடுத்தி எழுதும் அனைத்து ஆய்வுகளையும் நறுந்தமிழ் பாதுகாப்பு களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும். உங்களது ஆய்வுக்கட்டுரைகளால் தமிழின் உண்மை நிலையினைத் தக்க சான்றுகளோடு உலகறிய முன்னெடுப்போம். நமது தமிழ் மொழியின் உயர்வை உலகிற்கு உரக்கச் சொல்ல நமக்கான களம் இது. அன்புடன் இணையுங்கள்.



| | |
|---|---|
| **Title** | : International Journal Of Narunthamizh |
| **Variant Title** | : நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் |
| **starting year** | : 2016 |
| **Frequency** | : Quarterly (January, April, July, October) |
| **DOI Prefix** | : |
| **ISSN** | : |
| **Format Of Publication** | : online |
| **Subject,** | Multidisciplinary Subjects |
| **Language** | Multiple Language (Tamil, English) |
| **Editor in Chief** | : Dr. A.Irudhayaraj |
| **Publisher** | : Narunthamizh Ilakkiyapozhil (All's squire Publication) |

**நோக்கமும் வரையரையும்**

- நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்; மொழி, இனம், பண்பாட்டுக் கலாச்சாரம், சமயம், பொருளாதாரம், அரசியல், வணிகம், கல்வி தத்துவம், மருத்துவம், உளவியல் போன்றவைகளின் தொடர்புடைய சிக்கல்களுக்கான ஆய்வுத் தரத்தை மேம்படுத்தும் நடைமுறை அணுகுமுறைத் தளத்திற்கான ஒரு முன்னோடி ஆய்விதழாக உருவாவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உயர்தரம் மிக்க ஆய்வுகளைப் பதிப்பித்து அதனைப் பரந்த அளவிலான வாசகர்களுக்குக் கொண்டு சேர்ப்பதே இவ்வாய்விதழின் முதன்மை நோக்கமாகும். ஆய்விதழ் பதிப்புத் துறையில் உயர் அடைவை முன்னிருத்திப் பொறுப்புடனும் தொழில்முறை அணுகுமுறையுடனும் அதனை நிலைநிறுத்துதல்

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | **பாரதியின் பெண் விடுதலைக் கவிதைமொழி**<br>முனைவர் பெ.மோகன் | 8 |
| 2. | **ஐம்பூதக் கொள்கையின் அடிப்படையில் மனித உடலும் உலகமும்**<br>முனைவர் அ.இருதயராஜ் | 14 |
| 3. | **வள்ளுவர் ஒரு உழவியல் விஞ்ஞானி**<br>முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட் | 18 |
| 4. | **இன்குலாப் கவிதை வெளிப்படுத்தும் மனிதம்**<br>லூ.இக்னேசியஸ் சேசுராஜா, முனைவர் க.கமலா | 22 |
| 5. | **பாரதிதாசன் உணர்த்திய தாய்மொழி வழிக்கல்வி**<br>வெ.கவிதா, முனைவர் அ.இருதயரர்ஜ் | 26 |
| 6. | **தமிழர்களின் தாவர உணவுகள்**<br>முனைவர் பொ,குபேந்திரன் | 29 |
| 7. | **உவமையில் சிறந்தவன் கம்பன்**<br>முனைவர் ச. பிரியா | 33 |
| 8. | Redefining Boundaries: Emerging New Media Artists in India and the Rise of Digital Expression in 2025<br>Kalaiselvan. S | 40 |
| 9. | The Art of Storyboarding: A Research Perspective<br>Mr.A.Kalimuthu. MFA (PhD) | 43 |
| 10. | **நாககுமாரான் காவியத்தில் பஞ்சமி கதைகள்**<br>இர.சண்முகலட்சுமி, முனைவர். ககமலா | 46 |

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# பாரதியின் பெண் விடுதலைக் கவிதைமொழி

**முனைவர் பெ.மோகன்**

**Date of submission : 02-12-2025 Date of acceptance : 03-12-2025**
**Date of Publication: 30-01-2026**
**Corresponding auther's Name :Dr.P.Mohan**
**Email :** mohan.sl@velsuniv.ac.in
**Pages : 8 - 13**

கவிதையைப் படைக்காத, படிக்காத சமூகம் காட்டுமிராண்டிச் சமூகம் எனலாம். கவிதையை, கலை இலக்கியங்களைக் கொண்டாடும் சமூகமே பண்பாட்டில் வளர்ச்சியடைந்த சமூகமாகும். நாகரிகத்தில் எவ்வளவு மெச்சத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும், பண்பாட்டுடன் கூடிய வளர்ச்சியைப் பெற்ற சமூகமே முழுமையான வளர்ச்சியைப் பெற்றச் சமூகம் என்பர்.

கவிதை காலத்தால் முந்திய இலக்கிய வகையாகும். கவிதை மொழியாலான இலக்கியமாகும். மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் கவிதை மனத்திற்கு நெருக்கமான இலக்கியமாகும். அதற்கானக் காரணங்களில் ஒன்று, பண்டைக் காலந் தொட்டே மனித குலத்துடன் அது கொண்டுள்ள நெருக்கமான உறவாகும். மற்றது, கவிதையில் பயன்படுத்தப்படும் மொழியாகும். கவிதையின் மொழி, கூட்டுணர்வின் மொழியாகும். மனத்தை எழுச்சி கொள்ளச் செய்யும், எழுச்சியின் மொழியாகும். மன உணர்வைத் உருவாக்கும் எழில்மிகு மொழியாகும்.

**கவிதை மொழி**

ஒரு சாதாரண, சராசரி மனிதனின் பேச்சு மொழியின் உயரிய வடிவமே கவிதையின் மொழியாகும். அதனால் கவிதையின் மொழி உணர்வுகளைப் புலப்படுத்தும், உணர்வுகளைத் தூண்டிவிடும், உணர்வுகளின் உறவுகளை முன்னிறுத்தி எழுதப்படும் அகம் சார்ந்த மொழியாகும். கவிதைப் புரிந்துகொள்வதற்காக எழுதப்படுவதில்லை. கவிஞன் உணர்ந்தவற்றை நாமும் உணர்ந்து கொள்ளும் நோக்கத்துடனே கவிதை எழுதப்படுகிறது.

**"கவிஞன் புலி வேட்டைக்குச் செல்லும்போது**
**வாசகன் தூண்டிலோடு வந்துவிடக் கூடாது"** (வைரமுத்து. இரா,கேள்விகளால் ஒரு வேள்வி, முன்னுரை)

என்னும் வரிகளின் மூலம், கவிஞன் உணர்ந்தவற்றையே, வாசகனும் உணர வேண்டும் என்று இரா.வைரமுத்து வலியுறுத்துகின்றார்.

கவிதையில் வரும் சொற்களைக் காதுகளால் கேட்டு, நம் கண்களை மூடி, அரை மயக்க நிலையில் ஐம்புலன்களால் உணர வேண்டும். கவிதையின் மொழியைப் பகுத்தறிவுடன் பொருள் கொள்ளக் கூடாது. முதன் முதலாக யானையைக் கண்ட குழந்தையைப் போல், கைத் தட்டி பரவசம் அடைய வேண்டும். கவிதை வரிகளைப் படிக்கத் தொடங்கிய அடுத்தக் கணமே ஒரு குழந்தையாய் நம்மை மாற்றிக் கொண்டுத் துள்ளாட்டம் போட வேண்டும். ஏனெனில், கவிதையின் மொழி கொண்டாட்டத்தின் மொழியாகும்.

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்ப**
**தேன் வந்து பாயுது காதினிலே"** (செந்தமிழ் நாடு)

என்னும் கவிதை வரிகளைக் காதுகளால் கேட்டு, செந்தமிழ் நாட்டின் பெருமையை மனத்தால் உள்வாங்கி, உணர்வுகளால் ஒருங்கிணைத்து, அதன் இன்பத்தை நாவினால் இனிமையாக உணர வேண்டும். கூடுவிட்டுக் கூடுபாய்வதைப் போல, புலன் விட்டுப் புலன் மாறும் வித்தையை அறிந்தால்தான் கவிதையை உணர்ந்து கொள்ள முடியும். இதனை அறிந்தவர்கள் கவிதைத் தரும் இன்பத்துடன், அதன் பயனையும் முழுமையாகப் பெற முடியும்.

**முனைவர் பெ.மோகன்,** இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை - மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600117.

**தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு**

**சக்தி பிறக்குது மூச்சினிலே”**

**(செந்தமிழ் நாடு)**

என்னும் கவிதை வரிகள் கண்ணின் வழியாகவோ அல்லது காதின் வழியாகவோ நம்முள் சென்று, நம் ரத்த நாளஙகளைத் தட்டி எழுப்பி, நம் உடல் சோர்வையும் மனச் சோர்வையும் அடித்து விரட்டிவிட்டு நம்மைச் சக்தி வாய்ந்த மனிதராய் எழுச்சி கொள்ளச் செய்வதை உணர முடியும்.

இவ்வாறாகக் கவிதையின் ஒவ்வொரு வரியையும் உள்வாங்கி, உய்த்துணர்ந்து, கூட்டுணர்வால் படைக்கப்பட்டுள்ள கவிதையின் உணர்வுலகத்தில் சஞ்சரிக்கும் போதுதான், கவிதைக் கொண்டாட்டமாக மாறுகிறது. பகுத்தறிவை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அக உணர்வுகளால் எழுச்சி கொள்ளும் போதுதான், கவிதைச் சுக அனுபவத்தைத் தருகிறது.

கவிதையும் அக உணர்வும்

படிக்கத் தெரிந்தால் போதும். புத்தகங்களில் உள்ளவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். கவிதையைக் கண நேரத்தில் புரிந்து கொள்ள இயலும். என்றெல்லாம் படித்தவர்கள் மத்தியில் பரவலாகக் கருத்து உள்ளது. ஆனால், இது முற்றிலும் உண்மையல்ல. புற உலக உண்மைகளைப் புரிந்துகொள்வதற்கு மொழி ஓரளவு உதவும். ஏனெனில், புரிந்துகொள்ளுதல் என்பது புற உலகைப் பற்றியது. ஆனால், அக உணர்வுகளை மொழியின் மூலம் எளிமையாகப் புலப்படுத்த இயலாது. மேலும், அக உணர்வுகள் புரிந்துகொள்வதற்கானவை அல்ல, உணர்ந்து கொள்வதற்கானவை. ஆகையால் சராசரி மனிதர்களுக்கு அது இயலாமல் போகிறது.

**“அவள்**

**என்னைப்**

**பார்க்கும் போது மட்டும்**

**காதல் நடை நடக்கிறாள்”**

**(கவிஞர் சி. சுந்தரமூர்த்தி)**

**என்னும் புதுக்கவதையாக இருந்தாலும்,**

**“மயிற்கண் அன்ன மாமுடிப் பாவை**

**நுண்வலைப் பரதவர் மடமகள்**

**கண்வலைப் படூஉம் காணலானே”**

(குறுந்தொகை. 184)

என்னும் சங்க இலக்கியச் செய்யுளாக இருந்தாலும், புறநிலை உண்மைகளைக் கொண்டு புரிந்தகொள்ள இயலாது. “காதல் நடை” என்ற சொல்லுக்கு எந்த அகராதியிலும் பொருள் இருக்காது. “கண்ணால் வலை வீச்சு” என்னும் சொல்லுக்கும் இதே நிலைதான் என்பதை விளக்க வேண்டியதில்லை. இவை அக உணர்வுகளைப் புலப்படுத்தும் கவிதைமொழி எனலாம்.

“பிறருக்கு இன்னதென்று விளக்க இயலாதவற்றையே அகம் என்பர்” என்று உரையாசிரியர்களும் விளக்கம் அளிக்கத் திணருவதைக் காண்கிறோம். கவிஞர்கள் மற்றும் கலைஞர்கள் புலப்படுத்த விழைவது அக நிலைப்பட்ட உணர்வுலகமாகும். அவர்கள் புலன்களால் அறிந்த புற உலகைத் தங்களின் உணர்ச்சியினாலும், உணர்வினாலும் ஒருங்கிணைத்து உருவாக்கி வைத்திருக்கும் உணர்வுலகமாகும். “மொழிபெயர்க்க இயலாத கவிதைகளே சிறந்த கவிதைகள்” என மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிடுவற்கு இதுவே காரணமாகும். அகம் சார்ந்த உணர்வுகளை மொழியின் வாயிலாக புலப்படுத்துதே மிகுந்த சிரமத்திற்குரியது என்பதனால், மொழிபெயர்க்க இயலா நிலை உள்ளது.

கவிஞர்களும் மொழியும்

அகம் சார்ந்த உணர்வுலகமானது, ஒரு மொழியைப் பேசும் சமூகத்தினால் அவர்களுக்கு மட்டுமே புலப்படும்படிக் கட்டமைந்துள்ள “உணர்வகளின் ஒருங்கிணைப்பு” ஆகும். இதனைக் கவிஞர்களும் கலைஞர்களும் புலப்படுத்த விழைகின்றனர். அதனைப் புலப்படுத்துவதற்காக மொழியின் இலக்கணங்களைக் கவிஞர்கள் மீறுகின்றனர். மொழியிலுள்ளச் சொற்களைத் தங்களின் தேவைக்கு ஏற்ப பயன்படுத்துகின்றனர். குயவர்கள் தாங்கள் செய்ய விரும்பும் பொம்மைகளுக்கு ஏற்றவாறு களிமண்ணைப் பிசைந்துப் பக்குவப்படுத்துவதுவர். அதைப்போல, கவிஞர்களும் உணர்த்த விழையும்

கருத்திற்கேற்பப் புதுச் சொற்களைப் படைத்தளிக்கின்றனர். ஏற்கனவே சமூகத்தில் புழகத்தில் உள்ள பழைய சொற்களுக்கு புதிய பரிமாணம் அளிக்கின்றனர். ஏட்டில் இடம்பெறாத, சாதாரண மக்களின் வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி அறிவுலகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றனர். பழையச் சொற்களை மீட்டுறுவாக்கம் செய்கின்றனர்.

உலகத்தில் தலைசிறந்த கவிஞர்களும் படைப்பாளிகளும் எண்ணற்றப் புதிய சொற்களை உருவாக்கி, தங்கள் மொழிச் சொற்தொகுதியை மேம்படுத்துகின்றனர். சொற்களஞ்சியத்தை வளம்பெறச் செய்கின்றனர். இதனைக் கெட்டிதட்டிப் போன அறிவுலகம் தொடக்கத்தில் ஏற்பதில்லை, பின்னர் வேறு வழியின்றி பணிந்துவிடுகிறது. “கடிசொல் இல்லைக் காலத்துப் படினே” என்று தொல்காப்பியர் தீர்க்க தரிசனத்துடன் குறிப்பிட்டிருந்தாலும், அறிஞர் பெருமக்களுக்குப் புரிவதில்லை. ஆனால், கவிஞர்களும் கலைஞர்களும் தங்களின் உணர்வெழுச்சியால் அதனைச் சிக்கெனப் பிடித்து விடுகின்றனர்.

**பாரதியின் கவிதை மொழி**

“அக்கினிக் குஞ்சு” என்னும் சொல் பாரதி படைத்த புதுமைச் சொல்லாகும். இந்தச் சொல்லுக்குரிய பொருளை அகராதியில் தேடினால் கிடைக்காது. அப்படிக் கிடைத்தாலும், அது பாரதி நினைத்தப் பொருளாக இருக்காது. இங்குள்ள “அக்கினி” என்பது நெருப்பைக் குறிக்கவில்லை. “குஞ்சு” என்பது பறவையின் குஞ்சையும் குறிப்பிடவில்லை. புரட்சிகரமான எண்ணத்தின், செயல்பாட்டின் குறியீடாகக் கவித்துவத்துடன் பாரதியால் படைத்தளிக்கப்பட்டுள்ளது.

“நடிப்புச் சுதேசிகள்” என்னும் சொல்லும் மிகவும் நுட்பமானச் சொல்லாகும். இது எள்ளிநகையாடும் மெய்ப்பாட்டுடன் பிரயோகம் செய்யப்படுகிறது.

“கண்ணம்மா என் காதலி” என்னும் தொடர், பக்தி இலக்கியங்களில் காணக்கிடைக்கும், “நாயகன் நாயகி பாவம்” என்பதன் தொடர்ச்சி எனலாம்.

தமிழிலக்கிய உலகில் புதுமையின் நாயகனாகத் திகழ்பவர் பாரதி. சமூக உள்ளடக்கங்களைக் கவிதையின் பாடுபொருள்களாக்கியது, அதனை எளிய மக்களுக்கும் புரியக்கூடியத் தமிழில் எழுதியது போன்றவை பாரதி செய்த புதுமைகளில் முக்கியமானவை. எளிய மக்களிடமிருந்த இசை வடிவங்கள், மெட்டுகள், கலைக் கூறுகள், குடுகுடுப்பைக்காரன் பாட்டு போன்றவற்றை ஏட்டிலக்கியத்திற்கு ஏற்ற வகையில் மேம்படுத்தித் தந்தவர் பாரதி. இது போன்ற முயற்சிகள் ஏற்கனவே தமிழ் இலக்கிய மரபில் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், வெகுமக்களுக்குப் புரியும் மொழியில் படைத்தது பாரதி செய்த புதுமையாகும்.

புதிய உள்ளடக்கங்கள் மட்டுமல்ல, பழைய இலக்கியத்தை மீள் படைப்புச் செய்யும் போதும், பாரதி புதுமைக் கவிஞராகத் திகழ்கிறார். மகாபாரதக் காப்பியக் கதையை அடிப்படையாகக் கொண்டு “பாஞ்சாலி சபதம்” எழுதப்பட்டிருந்தாலும், அதிலிருந்து வேறுபட்ட புதிதான ஒரு புதுமைக் காப்பியமாகத்தான் திகழ்கிறது. பாஞ்சாலி சபதம் காப்பியத்தின் முன்னுறையில் பாரதி பின்வருமாறு எழுதுகிறார், "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்". இதுதான் பாரதி செய்த புதுமையின் அடிநாதமாகும். இவற்றுடன், சமகாலச் சமூகத் தேவைக்கு ஏற்ப உள்ளடக்கத்தில் சில மேம்பாடுகளையும், சமகாலச் சமூக உணர்களைத் தூண்டும் சொல்லாட்சிகளையும் சேர்த்ததனால், விடுதலைக்கானக் காப்பியமாகப் புது அவதாரம் கொண்டுள்ளது.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில், தருமன் நாட்டையும் தம்பிகளையும் பாஞ்சாலியையும் சூதில் தோற்றுவிடுகிறார். அதைத் தொடர்ந்து, துரியோதனின் அரண்மனைக்கு வருமாறு, சூதில் தோற்ற பாஞ்சாலியைச் துச்சாதனன் அழைக்கின்றான். பாஞ்சாலி வர மறுக்கின்றாள். அவளின் கூந்தலினைப் பிடித்துத் தரதரவென துச்சாதனன் இழுத்துச் செல்கின்றான். இக் காட்சியை நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் வேடிக்கைப்

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

பார்க்கின்றனர். ஒருவரும் துச்சாதனனைத் தடுக்கவில்லை. இக் காட்சியைப் பின்வருமாறு பாரதி கவிதையாக்குகிறார்,

**"நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.**
**பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ"**

(பாஞ்சாலி சபதம்)

இங்கு குறிப்பிடப்படும் "நெட்டை மரங்கள்", பெட்டைப் புலம்பல்" ஆகியவை மகாபாரதக் காலத்து மக்களின் நிலையல்ல. ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு, அடிமைகளாய், விடுதலை உணர்வின்றிக் கிடக்கும் இந்திய மக்களின் நிலையாகும். இவ்வாறுதான் விடுதலைப் போராட்டக் காலத்தில் உணரப்பட்டது. மகாபாரதக் காப்பிய மரபின் வழிநின்று, நடப்புச் சமூக நிகழ்வின் மேல் ஒளியைப் பாய்ச்சுவது பாரதியின் கவிதை ஆளுமையாகும். அதனால், இது மகாபாரதக் காட்சி என்னும் நிலை கடந்து, விடுதலை வேட்கையைத் தூண்டும் காப்பியமாக உணர்ந்துகொள்ளப்பட்டது.

"நெட்டை மரங்கள்", பெட்டைப் புலம்பல்" என்னும் சொற்கள் உழைக்கும் மக்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் சாதாரணச் சொற்களாகும். இவற்றை, வெகுமக்கள் விடுதலை உணர்வெழுச்சியைப் பெறுவதற்கான ஆயுதமாக்குவது பாரதியின் கவிதை நுட்பமாகும். வெகுமக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் காப்பியம் எழுதப்பட்டதால், வெகுமக்களின் சொல்லாட்சியே கவிதையில் கோலாச்சுகிறது. ஆனால், இந்த வரிகள் போற்றப்பட்டுள்ள அளவிற்குத் தூற்றப்பட்டுள்ளதையும் காண்கிறோம். ஆராய்ச்சி என்ற பெயரில் அவதூற்றுச் சகதியால் மாசுபடுத்தப்பட்ட கவிதை வரிகளில் இவையும் குறிப்பிடத்தக்கவை. பெண் விடுதலையைப் பாடிய கவிஞனைப் பிற்போக்குக் கவிஞன் என்றும் பெண் இனத்தை இழிவுபடுத்திவிட்டார் என்றும் "பெட்டைப் புலம்பல்" என்னும் வரிக்குத் தவறான விளக்கங்கள் அளிப்பதன் மூலம் பாரதிக்கு எதிரான ஆயுதமாகவும் இச்சொல் மாற்றப்பட்டுள்ளது.

கவிதையை இயந்திர கதியில் புரிந்துகொள்வதனாலும், பாரதியின் மேலுள்ள மலிவானக் காழ்ப்புணர்ச்சி அரசியல் காரணமாகவும் இதுபோன்ற விளக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. புதுமையின் மேல் நாட்டம் கொண்ட இளைஞர்களும் இளம் அறிவாளிகளும் இவை போன்ற விட்டில் பூச்சி விமர்சனங்களுக்கு பலியாகின்றனர்.

**பெண் விடுதலை**

பாரதியின் சம காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும் பெண் விடுதலைக் குறித்து பலர் பேசி வந்தாலும், பாரதியின் அணுகுமுறை வேறுபட்டது; ஆக்கப்பூர்வமானது. அனைத்து வகையான அடிமைத் தளைகளில் இருந்தும் பெண்கள் விடுதலைப் பெற வேண்டும் என்னும் வேட்கையே பாரதியின் கவிதைகளில் காணக் கிடைக்கின்றன.

மனித இனம் விடுதலைப் பெறுவதற்கான முதல் ஆயுதம் கல்வி கற்றலாகும். ஆகையால்,

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;**
**எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி!**
**வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்,**
**வேண்டி வந்தோம் என்று கும்மியடி!"**

(பெண்கள் விடுதலைக் கும்மி)

என்று கல்வி கற்றலின் தேவையை வலியுறுத்துகின்றார். கல்வியைக் கற்பதன் மூலம் மட்டும்தான் பெண்கள் உண்மையானச் சமூக உயர்வை அடைய முடியும் என்று பாரதி வலியுறுத்திக் கூறுகின்றார். அதாவது, அறிவினில் ஆணுக்கு நிகராகத் திகழ்வது, அனைத்துச் சமூகத் துறைகளிலும் பணியாற்றுவது, பொருளாதாரத் தேவைகளுக்கு ஆண்களைச் சாராதிருப்பது, பெண்கள் தங்களின் சுயசார்பு ஆளுமையை வளர்த்துக் கொள்வது என்னும் சமூக உயர்வுகளை அடைய முடியும் என்கிறார்.

இந்தக் கருத்துகளை வலியுறுத்த, பாரதி கையாண்ட கவிதைமொழியும் அதன் சந்தமும் மிகவும் சிறப்புக்குரியவை. இதனை,

**"கும்மியடி! தமிழ் நாடு முழுவதும்**

**குலுங்கிடக் கைக்கொட்டி கும்மியடி!**

**நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின**

**நன்மை கண்டோம் என்று கும்மியடி!"**

(பெண்கள் விடுதலைக் கும்மி)

என்னும் கவிதை வரிகளில் காணலாம். பெண் விடுதலைக் கருத்துகளை வலியுறுத்த, பெண்களின் ஆட்டப் பாடல் வடிவமான "கும்மிப் பாடல்" வடிவத்தைப் பாரதி தேர்வு செய்துள்ளார்.

கும்மிப் பாடல் வடிவம், பெண்களின் மன உலகத்தில் அல்லது உணர்வு உலகத்தில் மிகவும் நெருக்கமானப் பிணைப்பைக் கொண்டுள்ளது. காலம் காலமாகத் திருவிழாக் காலங்களில், கோயில்களின் அருகில் கைகளால் கும்மியடித்து, எழுச்சியுடன் பாடும் மரபைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எழுச்சிமிகு பெண் விடுதலைக் கவிதை என்னும் புதிய உள்ளடக்கத்திற்கு மரபான வடிவத்தைப் பயன்படுத்துகிறார். கோயில்களில் கும்மியடித்தது போதும், உங்கள் விடுதலைக்காகக் கும்மியடியுங்கள் என்கிறார் பாரதி. கும்மியடிக்கும் சத்தத்தில் "தமிழகமே குலங்க வேண்டும்" என்று கூறும் போது, கவிதையின் உணர்ச்சி உச்ச நிலைக்குச் செல்கிறது. பெண்களைப் பிடித்திருக்கும் பிசாசுகள் எல்லாம் தலைதெரிக்க ஓடுகிறது.

கற்பினைக் காரணம் காட்டி, காலம் காலமாகப் பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்திருந்தனர். இனி அவ்வாறு பூட்டிவைக்க முடியாது என்று பாரதி கூறுகிறார். அவ்வாறு செய்பவர் விந்தை மனிதர் என்றும் உரைக்கின்றார். மேலும்,

**"கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு**

**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"**

(பெண்கள் விடுதலைக் கும்மி)

என்று கூறி, ஒட்டுமொத்த பிற்போக்குவாதிகளை மட்டுமல்ல, ஆண் இனத்தையே கூட கோபத்தில் ஆழ்த்துகிறார். கற்பு என்றால் என்ன? அது இருக்கிறாதா? இல்லையா? என்கின்ற விவாதத்திற்குள் பாரதி செல்லவில்லை. அதற்குப் பதிலாக, அது உண்டென்றால், ஆண்களும் அதைப் பின்பற்ற வேண்டும் என்கிறார். இது பாரதியின் கருத்துத் தெளிவையும், கவிதைச் சொல்லாட்சியையும் ஒரு சேர மெய்ப்பித்துள்ளது.

பெண்கள் தரையைப் பார்த்தபடி நடக்க வேண்டும், அதுதான் கற்புடையப் பெண்டிற்கழகு, போன்றவற்றையும் பாரதி ஏற்கவில்லை.

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெரிகளும்,**

**திமிர்ந்த ஞானச் செருக்கும்" (புதுமைப் பெண்)**

என்னும் பாரதியின் மிடுக்கானக் கவிதை வரிகளைப் போல, பெண்களும் திகழ வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

மரபு என்னும் போர்வையில், அடிப்படைவாதக் கருத்துகள் பெண்களை அடிமைப்படுத்தி வருகின்றன. சமூக நடைமுறை என்ற பெயரில், காலம் காலமாக இது நிகழ்ந்துவருகிறது. கவிதை என்னும் அணுகுண்டு கொண்டு அவற்றைத் தகர்த்தெரிய முயல்கிறார் பாரதி. இதனை,

**"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;**

**ஞான நல்லறம் வீர சுதந்திரம்;**

**பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"**

(புதுமைப் பெண்)

என்னும் கவிதை வரிகளில் காணலாம். இது புதுமைப் பெண்களின் குரலாகக் கவிதையில் ஒலித்தாலும், சிவசக்தியின் குரல் என்றே பாரதி உரைக்கின்றார். பெண்களைத் தெய்வம் என்றும் போற்றுகின்றார். இதனை,

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்**

**பூரண நல்லறத்தோடு இங்கு பெண்ணுருப்**

**போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்"**

(புதுமைப் பெண்)

என்னும் கவிதை வரிகள் சான்று பகிர்கின்றன.

எமக்குத் தொழில் கவிதை என்றவர் பாரதி. கவிதைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியின்றித் திகழ்ந்தவர். அனைத்து வகையான அடிமைத்தனத்தில் இருந்தும் சமூகம் விடுதலை பெற

வேண்டும் என்னும் வேட்கையைக் கவிதையில் விதைத்தவர். இவ்வகையில் பெண் விடுதலையைப் போற்றியவர்

**"மாதர்க்கு உண்டு சுதந்திரம் என்று நின்**
**வண் மலர்த் திருவாயின் மொழிந்த சொல்**
**நாதந் தானது நாரதர் வீணையோ?**
**நம்பிரான் கண்ணன் வேய்ங்குழல் இன்பமோ?"**

(புதுமைப் பெண்)

பெண்கள் விடுதலைப் பெற்றுவிட்டனர் என்ற செய்தியைக் கேட்ட பொழுதில், தான் அடையும் இன்பத்தை மேற்கண்டவாறு பாடியுள்ளார் பாரதி. நாரதர் மீட்டும் வீணை இசையின் நாதமாகவும், கண்ணன் இசைக்கும் புல்லாங்குழலின் இன்னிசையாகவும் தன் காதுகளில் அச்செய்தி ஒலித்தது என்கிறார். மேற்கொண்ட கவிதை வரிகளை உணர்ந்துகொள்ள இயலுமாயின், பாரதியின் பெண் விடுதலைக்கான வேட்கையையும் புரிந்துகொள்ள இயலும்.

பாரதியின் பெண் விடுதலை என்பது, அனைத்து வகையானச் சமூகக் கட்டுகளில் இருந்தும் பெண்கள் விடுதலைப் பெற வேண்டும் என்னும் வேட்கையை விதைப்பது, நவீனத் தமிழ்ச் சமூக உருவாக்கத்திற்கு ஏற்ற வகையில் பெண் ஆளுமையைப் படைப்பது, அதற்கானச் செயல்திட்ட முன்வரைவுகளைக் கவிதையின் வழிக் காட்சிகளாக்குவது என்னும் நிலையில் அமைந்திருக்கின்றன.

**முடிவுரை**

பாரதியின் கவிதைமொழியைப் புரிந்துகொள்வதன் மூலம், கவிதைக்குள் இருக்கும் உணர்வைப் பெறலாம், அதன் அரசியலை அறியலாம். கவிதைமொழியை அறியாதவர்கள் தங்களின் அரசியல் சாயத்தை மட்டுமே பாரதியின் மேல் பூசு இயலும். பாரதியின் கவிதையை என்றுமே உணர முடியாது

---

**சான்றாதார நூல்கள்**

1. சுந்தரமூர்த்தி.சி, கவிதைகள் (கையெழுத்துப் பிரதி)
2. குறுந்தொகை
3. பாரதியார், பாரதியார் கவிதைகள்
4. தொல்காப்பியம்
5. வைரமுத்து. இரா.,கேள்விகளால் ஒரு வேள்வி.

ISSN :
: DOI :

# ஐம்பூதக் கொள்கையின் அடிப்படையில் மனித உடலும் உலகமும்

(முனைவர் அ.இருதயராஜ்)

Date of submission : 22-12-2025 Date of acceptance : 22-12-2025
Date of Publication: 30-01-2026
Corresponding auther's Name :Dr.A.Irudhayaraj
Email : irudhayaraj.sl@velsuniv.ac.in
Pages : 14 - 17

**ஆய்வுச்சுருக்கம்**

நலமுடன் வாழ்தல் என்பது இன்றைய காலக்கட்டத்தில் முயல்கொம்பாக உள்ளது. ஆனால் பண்டைய தமிழ்ர்கள்நலமுடனும் பலத்துடனும் வாழ்ந்தார்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. அதற்கான காரணம் அவர்கள் இயற்கையுடன் இயந்த வாழ்வு வாழ்ந்தார்கள். இவ்வாழ்க்கைமுறைகளில் ஒன்று ஐம்பூதக் கோட்பாட்டின் நெறியில் பண்டைய தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தார்கள் என்பதை தமிழ் இலக்கியங்களின் வழி பகுப்புமுறை ஆய்வு தொகுப்பு முறை ஆய்வு விளக்கமுறை ஆகிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி விளக்கப்பெறுகின்றன.

**திறவு சொல்** நிலம், நீர், ஆகாயம், தீ, காற்று, உடல், உலகம்,

**முன்னுரை**

இலக்கியங்கள் மக்களின் நாகரிக மேம்பாட்டையும், வாழ்வியல் சார்ந்த கொள்கைகளையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. சங்க இலக்கியப் பாடல்கள் புலப்படுத்தும் ஐவகை நில அமைப்புக் கூறுகள், அந்நிலம் சார்ந்த வாழ்வியல் முறைகள், நல்ல ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பராமரிப்பதற்கான ஒரு வழிமுறையைப் பண்டையத் தமிழரர்இயற்கையுடன் இயந்து வாழ்ந்தால் கண்டறிந்தனர். அவர்களின் நலமான வாழ்விற்கு அடிப்படையான காரணம் ஐம்பூதக் கொள்கை ஆகம். இக்கொள்கையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஐம்பெரும் பூதங்கள்**

நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்களின்

**ஆகாயம் (விண்வெளி)**

'ஆகாயம்' (விண்வெளி) எனும் பூதம் 'ஒலி' எனும் ஒரே குணத்துடன் தோன்றியது. ஆகாயம் மற்ற நான்கு பூதங்களான காற்று, தீ, நீர் மற்றும் மண் ஆகியவைகள் தோன்றக் காரணமாக உள்ளது. ஆகாயம் குளிர், வெப்பம், உலர்தல், மணம் போன்ற குணங்கள் அற்றது. ஆகாயம் என்பது வெற்றிடம் ஆகும்.

**காற்று (வாயு)**

'காற்று' எனும் பூதம், 'தொடு உணர்வு' எனும் குணத்துடனும், ஆகாயத்தின் சொந்த குணமாக ஒலி எனும் குணத்துடனும் தோன்றியது. எனவே காற்று தன் சொந்த குணமான தொடு உணர்வுடன், ஆகாயத்தின் ஒலி எனும் குணத்துடன் இரண்டு குணங்கள் கொண்டுள்ளது. காற்று எனும் பூதத்தின் இயல்பு ஒரு பொருளை உலர்த்தும் சக்தி படைத்தது. காற்றில் பிராணன் எனும் பிராணவாயு ஒரு உயிரை காப்பதால்,

**நெருப்பு (அக்னி)**

'தீ' எனும் பூதம் 'உருவம்' (ரூபம்) எனும் குணத்துடன் தோன்றியது. அத்துடன் ஆகாயம் மற்றும் காற்றின் குணங்களான ஒலி மற்றும் தொடு உணர்வு குணங்களுடன் தன் சொந்த குணமான உருவம் எனும் குணத்துடன் 'தீ' எனும் பூதம் மூன்று குணங்கள் கொண்டுள்ளது.

முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

'நீர்' எனும் பூதம் 'சுவை' எனும் குணத்துடன் உண்டானது. அத்துடன் ஆகாயம், காற்று, தீ எனும் பூதங்களின் குணங்களான ஒலி, தொடு உணர்வு மற்றும் உருவம் (ரூபம்) எனும் மூன்று குணங்களுடன் தன் சொந்த குணமான சுவை எனும் குணத்துடன், நான்கு குணங்களுடன் நீர் எனும் பூதம் விளங்குகிறது.

**நிலம் (பிருதிவி)**

'நிலம்' எனும் பூதம் 'வாசனை' எனும் குணத்துடன் தோன்றியது. அத்துடன் ஆகாயம், காற்று, தீ, நீர் எனும் நான்கு பூதங்களின் குணங்களான ஒலி, தொடு உணர்வு, உருவம், சுவை எனும் நான்கு குணங்களுடன், தன் சொந்த குணமான வாசனை எனும் குணத்துடன் ஐந்து குணங்களைக் கொண்டது மண் எனும் பூதம்.

**உலகப்பொருட்கள்**

பேரண்டம் எவ்வாறு தோன்றியது என்ற கேள்விக்கு இன்றைய அறிவியல் "பெருவெடிப்பு கொள்கை" **(Big Bang Theory)** மூலம் விளக்கம் அளிக்கிறது. இதனை முன்வைத்தவர் **Fred Hoyle.** தமிழ் இலக்கியங்களிலும் உலகத் தோற்றம் குறித்த சிந்தனைகள் காணப்படுகின்றன.

இந்த உலகம் ஐம்பெரும் பூதங்கள் கலந்த மயக்கம் என்பது உலகினையும் உலகிலுள்ள பொருள்களையும் குறிக்கும். உலகமாவது, முத்தும் மணியும் கலந்தாற் போல நிலம்' தீ, நீர்' வளி, ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுள் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற் போல வேற்றுமைப் படாது நிற்கும். அவ்விரண்டினையும் உலகம் உடையதாகலின் கலந்த மயக்கம் என்பதை,

**"நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சங்க காலம் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்ட காலம். மக்கள் வாழ்கின்ற உலகம் நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களால் படைக்கப்பட்டது. முத்தும் மணியும் கலந்தாற்போல, உலகமும் பொன் வெள்ளி, செம்பு ஆகியவை உருக்கினாற் போல உலகிலுள்ள பொருள்களும் அமையும் என்று புறத்தே உள்ள பூதங்களையும் அகத்தே உள்ள பூதங்களையும் வேறுபடுத்திக் காட்டினார் என்க. அணுச் செறிந்த நிலனும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத் தடவி வரும் காற்றும் அக்காற்றின் கண் தலைப்பட்ட தீயும், அத்தீயோடு மாறுபட்ட நீருமென ஐவகைப் பெரிய பூதத்தினது தன்மை போல என்று ஐம்பெரும் பூதத்தைப் பற்றிப் புறநானூறு குறிப்பிடக் காணலாம். இதனைஇவ்வைம் பூதங்களின் தன்மையும் மனித உடலிலும் உள்ளன. இதனை புறநானூறு,

**"மண்டிணிந்த நிலனும் நிலனேந்திய**
**விசும்பும் விசும்புதைவரு வளியும் வளித்தலைஇய**
**தீயும் தீமுரணிய நீரு மென்றாங்கு ஐம்பெரும்**
**பூதத் தியற்கை போல"**

என்ற பாடல் விளக்குகின்றன.

**மனித உடலும் ஐம்பூதங்களும்**

உடலில் காற்றின் தன்மை கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். உடலில் சூடு கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். உடலில் நீரின் அளவு கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்று கூறப்படுவதிலிருந்து ஐம்பூதங்களில் காற்று, தீ, நீர் ஆகியவற்றின் அளவு நீராக இருக்கவேண்டும். அவற்றின் அள்வு கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். இதனை,

**"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளி முதலா எண்ணிய மூன்று"**

என்ற வள்ளுவர் குறள் தெளிவுப்படுத்துகின்றன.

இந்த ஐம்பெரும் பூதங்கள் தொடக்கமாக கொண்டு, சுவை முதலான புலன்களும், அவற்றை நுகரும் பொறிகளும் உண்டாகின்றன என்று பரிபாடல் உரைக்கிறது. இதனை,

**"சுவைமை யிசைமை தோற்ற நாற்ற மூ**
**றவையு நீயே யடு போ ரண்ணால்**
**அவையவை கொள்ளுங் கருவியு நீயே**
**முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்**
**ஒன்றனிற் போற்றிய விசும்பும் நீயே**

ISSN :
: DOI :

**இரண்டி னுணரும் வளியு நீயே**

**மூன்றி னுணருந் தீயு நீயே**

**நான்கி னுணருந் நீரு நீயே**

**ஐந்துடன் முற்றிய நிலனு நீயே"**

என்ற பாடலில் ஐம்பூதங்களும் அவற்றின் குணங்களுமான ஓசை, ஊறு, ஒளி' சுவை, நாற்றம் என்னும் குணங்களால் பூதங்கள் உணரப்படுகின்றன.

உடலை வைத்துத்தான் இந்த உலகத்தில் நமக்கு இருப்பிடம். இதை எல்லோரும் உணர வேண்டும். ஒருவரின் லட்சியங்கள் எவ்வளவு உயர்ந்ததாக வேண்டுமானலும் இருக்கலாம். ஆனால் உடல் நலம் ஒத்துழைக்கவில்லை என்றால், பாதிக்கிணறு தாண்டிய கதைதான். எனவே, உடலைப் பாதுகாத்து, நோயில்லா நெறியை நமக்கு நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

உடல் என்பது, எலும்புகளை கை கால்களைப் போட்டு நீட்டி வைத்து, அவற்றின் 'இருப்பிடம்' மாறிவிடாமல் இருக்க நுண்ணிய துவரங்களால் இணைத்து, நரம்புகளால் இழுத்துக் கட்டி, தோலால் மூடி, அவற்றுக்கு இடையே தசைகளைச் சேர்த்து, ரத்தத்தை ஊற்றி, உள்ளே வாயு எனப்படும் பிராணனை உள்ளடக்கி, உடல் என்ற ஓர் உருவம் உருவாக்கப்பட்டிருப்பதாக சித்தர் பாடல் நமக்கு விவரிக்கிறது. இதனை,

**'கூறுவேன் தேகமது என்னவென்றால்**

**குருபரனே எலும்புதனைக் காலாய் நாட்டி**

**மாறுபடா எலும்புக்குத் துவாரமிட்டு**

**வன்மையுடன் நரம்பினால் வலித்துக் கட்டி**

**தேறுதலாய் இரத்தமதை உள்ளே ஊற்றி**

**தேற்றமுடன் அதன் மேலே தோலை மூடி**

**ஆறுதலாய் வாய்வுதனை உள்ளடக்கி**

**அப்பனே தேகமென்ற கூறுண்டாச்சே'**

என்ற பாடலில் மனித உடலில் ரகசியத்தைச் சொல்லும் இந்த எட்டு வரி பாடலில் மனிதனுடைய உடலைப் பற்றிய சித்தர்களின் நுண்ணறிவு துல்லியமாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், உடல் கட்டமைப்பை,

**எலும்புதனை – எலும்பு மண்டலம்**

**நரம்பினால் – நரம்பு மண்டலம்**

**இரத்தமதை -ரத்த ஓட்ட மண்டலம்**

**தோலை மூடி -தசை மண்டலம்**

**வாய்வுதலை – மூச்சு மண்டலம்**

அதாவது, இந்த ஐந்து மண்டலங்களால்தான் தேகம் என்ற உடல், கடமையின் பொருட்டு இந்த உலகில் நடமாடுவதாக சித்தர்கள் கூறுகின்றனர். இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் தமது பணியைச் சரிவர செய்துவந்தால்தான், நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதை நாமே உணர முடியும்.

**ஐந்து மூலதத்துக்கள் – ஐந்து முக்கிய உறுப்புகள்**

பஞ்சபூதக் கொள்கைப்படி:

**நுரையீரல் – காற்று**

**கல்லீரல் – விண்**

**மண்ணீரல்– நிலம்**

**இருதயம் – நெருப்பு**

**சிறுநீரகம் – நீர்**

இந்த உறுப்புகள் உடலின் முக்கிய உயிர் ஆற்றலை உள்ளிழுக்கும் மையங்களாகக் கருதப்படுகின்றன. மேலும், பஞ்சபூதக் கருத்து மன உணர்வுகளையும் உடல் உறுப்புகளையும் இணைக்கிறது:

**கோபம், டென்ஷன் – கல்லீரல்**

**கவலை – மண்ணீரல்**

**துக்கம் – நுரையீரல்**

**பயம் – சிறுநீரகம்**

**பொறாமை, பெருமை – இருதயம்**

நவீன மருத்துவமும் மனஅழுத்தம் (stress), நீண்டகால கவலை, துக்கம் போன்றவை உடல் நலத்தில் தாக்கம் ஏற்படுத்தும் என்பதை ஏற்கிறது.

**உடலும் உலகமும்**

அண்டத்துக்கு வேறு, பிண்டத்துக்கு வேறு என்னும் பாகுபாடு இயற்கை நியதியில் இல்லை என்பதை சைவத் திருக்கோயில்களில் காணப்படுவதைப் போல வேறிடங்களில் காணப்பெறவில்லை என்பதால், பஞ்சபூதக் கொள்கை தமிழகத்துக்கு மட்டுமே உரியதெனலாம். இதனை,

**"அண்டத்தி லுள்ளதே பிண்டம்**
**பிண்டத்தி லுள்ளதே அண்டம்**
**அண்டமும் பிண்டமும் ஒன்றே**
**அறிந்துதான் பார்க்கும் போதே"**

என்று சட்டமுனிஞானம் உரைக்கக் காணலாம்.

பூமியின் மேற்பரப்பில் சுமார் 71% பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. அதில் பெரும்பாலானவை பனிக்கட்டிகளாக (Glaciers) உள்ளன. மனித உடலில் பொதுவாக 50% முதல் 75% வரை தண்ணீர் உள்ளது, இது வயது மற்றும் பாலினத்தைப் பொறுத்து மாறுபடும். சராசரியாக, வயது வந்த மனித உடலில் 60% தண்ணீர் காணப்படுகிறது, இது உடல் வெப்பநிலை, மூட்டு உயவு மற்றும் நச்சுக்களை நீக்குதல் போன்ற அத்தியாவசிய செயல்பாடுகளுக்கு அவசியம்.உலகத்திலில் நான்கில் மூன்று பகுதி நீரால் அமைந்துள்ளது மனித உடலும் அவ்வாவே அமைந்துள்ளது

**முடிவுரை**

இயற்கையோடு இயைந்து வாழ்வதே மனிதனின் கடமை என வலியுறுத்துகின்றனர். ஐம்பெரும் பூதங்கள் – நிலம், நீர், தீ, வளி, விசும்பு – ஆகியவற்றின் தன்மைகள் பிண்டம் (உடல்) மற்றும் பேரண்டம் (பிரபஞ்சம்) ஆகியவற்றின் இயக்கு சக்திகளாக இருப்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இவ்வுலகில் மிகினும் குறையினும் நோயும் பேரிடரும் ஏற்படும் என்பதை உணர்ந்தனர்.

---

**துணைநின்றவை**

1. 1**தொல்காப்பியம் பொருளதிகாரம்**, சுந்தரமூர்த்தி. கு (ப.ஆ), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். மு.ப. 1985.
2. **சட்டமுனிஞானம் இ, சித்தர் பாடல்,** பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
3. **பரிபாடல் மூலமும் உரையும் ,** நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை
4. **புறநானூறு மூலமும் உரையும்** , நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
5. **WWW. செய்திதளம்**
6. WWW. மனித உடலில் நீரின் அளவு சதவீதம்

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# வள்ளுவர் ஒரு உழவியல் விஞ்ஞானி

(முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட்)

Date of submission : 02-12-2025 Date of acceptance : 03-12-2025
Date of Publication: 30-01-2026
Corresponding auther's Name :Dr.s.Anitha sophiya Markiret
Email : sophiya@gmail.com
Pages : 18 - 21

**முன்னுரை :**

உலக மொழிகளில் முதன்மையான மொழி தமிழ் மொழியாகும். தமிழ்மொழி மிகத் தொன்மையான மொழி என்பர். இத்தொன்மையான மொழி இலக்கணம், இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சிறப்பிடம் பெற்றுள்ளது. இவற்றுள் பல்வேறு அறிஞர்கள் பன்முக நோக்கில் ஆராயப்படும் திருக்குறள் தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. உணவிற்கு அடிப்படையானது உழவுத்தொழில். ஆகையால் உழவர்கள் பற்றியும், உழவுத் தொழில் பற்றியும் குறளில் இடம் பெறும் உழவு குறித்த செய்திகளை அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வள்ளுவர் முதற்றே அறிவு :**

வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவம் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவருக்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி,

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவ பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் "எல்லாப் பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்துள்ளார்.இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட்ச் சிறப்பை உணர்த்துவன. தமிழ் நாடு செய்த தவப்பயனாய் தோன்றிய வள்ளுவர் தந்த தமிழ் மறையாம் திருக்குறள் உலகப்பொதுமறை என்று போற்றப்படுகிறது. ஒன்றே முக்கால் அடியில் ஒருங்கிணைந்த கருத்துக்களை ஓசையுடன் சொன்னதால்தான், திருவள்ளுவனாரின் திருக்குறளைத் திறனாய்வு செய்த இடைக்காடர் என்னும் புலவர்,

**"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி**
**குறுகத் தரித்த குறள்"**

எனக் கூறியுள்ளார். மிகவும் சிறிதளவு என்பதற்குக் கடுகளவு எனக் கூறும் மரபு உண்டு. ஒரு சிறிய கடுகைத் துளைத்து அதனுள் ஏழு கடலைப் புகுத்தமுடியுமா? முடியாது. ஆனால், அந்த அரிய செயலைத்தான் திருவள்ளுவர் தம் ஒவ்வொரு குறட்பாவிலும் ஆற்றியுள்ளதாக இடைக்காடர் இயம்பியுள்ளார். ஔவையார் என்னும் புலவர் பெருமாட்டியோ,

**"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தரித்த குறள்"**

என்று பாடியுள்ளார். அணு என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் Atom என்பது. இந்த Atom என்பதற்குப் பிளக்க முடியாதது என்பது பொருள். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் அணு பிள்க்கப்பட்டதை உலகு அறியும். அணுவைப் பிளத்தல் - துளைத்தல் என்ற ஒரு குறிப்பைப் பல நூற்றாண்டுகட்கு முன்பே ஔவையார் அறிவித்துள்ளார். பிளக்க முடியாத - துளைக்க முடியாத அணுவையும் துளைத்து அதனுள் ஏழுகடலைப் புகுத்துவது போன்ற அரிய பெரிய செயலைத் திருவள்ளுவனார் செய்துள்ளாராம். அதாவது ஒவ்வொரு குறளிலும், அரிய பெரிய - ஆழ்ந்த உயர்ந்த - பரந்து விரிந்த கருத்துக்கள் உள்ளன என்பது இதன் பொருளாகும். எனவே, திருக்குறள் நூலை ஒரு மாபெரும்

**முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட்** உதவிப்பேராசிரியர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

கடல் என்று கூறலாம். கடலிலே முத்துக்கள் இருக்கும். திருக்குறளாகிய மாபெருங்கடலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது முத்துக்கலுள் வேளாண்மையின் சிறப்புக் குறித்துப் பாடிய "உழவு" என்ற அதிகாரத்தில் உள்ள பத்துப் குறட்பாக்களும் உழவின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. திருவள்ளுவர் பல்துறை வள்ளுநர், உழவைத் தொழிலாகவும் கொண்ட உழவர் எனவும் கூறலாம்.

**விருந்தோம்பல் :**

விருந்தினரை உபசரிக்கும் 'விருந்தோம்பல்' அதிகாரத்தில்

**"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்-81)**

இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் மனைவியோடும் வனத்தில் செல்லாது இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தற் பொருட்டு வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும், பொருள் செய்தலும் காரணமாக வரும் துன்பச் செய்கைகளுக்கு எல்லாம் பயன் இல்லை என்பதாம்.

கைமாறு கருதாது, பிறருக்கு உதவி செய்யும் பொருளில் 'ஒப்புரவு அறிதல்' அதிகாரத்தில்,

**" தாளாற்றித் தந்த பொருள்ளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தல் பொருட்டு" (குறள்-212)**

பிறர்க்கு உதவாதார் போலத் தாமே உண்டன் பொருட்டும் வைத்து இழத்தற் பொருட்டும் அன்று என்பதாயிற்று. விடாமுயற்சியும் உடல் முயற்சியும் உடையவனாக இருக்க வேண்டும் என்று கூறும் 'ஆள்வினையுடைமை' அதிகாரத்தில்,

**" தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு" (குறள்-613)**
**"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வேளாண்மை போலக் கெடும்" (குரல்-614)**

என்ற குறட்பாக்களில் வேளாண்மை என்பது உதவி செய்தல் உபகாரம் செய்தல் என்று கூறப்பட்டது.

**உழவுத் தொழிலே சிறந்தது:**

உழவுத் தொழிலின் இன்றியமையாத தன்மையையும் சிறப்பையையும் இத்தொழிலில் உழவர்கள் கடைபிடிக்க வேண்டிய செயல்களையும் கூறுவதுதான் 'உழவு' என்ற அதிகாரத்தின் சிறப்பு உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலைப் பின்பற்றியே நிற்கும். அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவே சிறந்த தொழிலாகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**" உழுவார் உலகத்தார்க்கு ஆணி" - (குரல்-1031)**
**" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்" - (குரல்-1033)**

உழவுத்தொழில் நின்றுவிட்டால் உலகத்தில் இல்லறமும் நடக்காது துறவறமும் நடக்காது இந்த பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு வருகிறது என்ற உண்மையை,

**" சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலைக்கு – (குரல்-1031)**

என்ற குறளின் மூலம் உழவே தலை என்றும் கூறினார்.

**"உழுவார் உலகத்தார்க் காணியஃதாற்றா**
**தொழுவாரை எல்லாம் பொறுத்து" (குறள்-1032)**

காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு என்றாற் போல உழுவார் என்றது உழுவிப் பார்மேலும் செல்லும் உலகத்தார் என்றது ஈண்டு இவரையொழிந்தாரை, கலங்காமல் நிறுத்தற்கண் ஆணி போறலின் ஆணி என்றார்.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் :**

உழவு செய்து வாழ்வாரே உரிமையோடு வாழ்வார், மற்றவர் பிறரைத் தொழுது அவர் பின் சென்று வாழ்வர். இதனை,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள்-133)**

என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

உழுது நெல்லை உற்பத்தி செய்யும் உழவர்கள் பல வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் குடைகீழ் கொண்டு வருவார்கள் என்பதை,

**"பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர்" (குரல்-1034)**

என்ற குறள் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் நான்கு வருணத்தார்களில் (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்) இரண்டு வருணத்தாரான அரசரும், வேளாளரும் இருந்த செய்தியை அறியமுடிகிறது.

**உழவர்கள் யாசிக்க மாட்டார்கள்:**

கையினால் தொழில் செய்து உழைத்து உண்ணும் தொழிலாளர் பிறரிடம் சென்று யாசிக்க மாட்டார். வெள்ளத்திலும் வறட்சியிலும் தம்மை யாசித்தவருக்கு மறைக்காமல் கொடுப்பர். இதனை,

**" இரவார் இறப்பார்க்குஒன்று ஈவார் கரவாது**
**கைசெய்துஊண் மாலை யவர்" (குறள்-1035)**

என்ற குறளின் வழி வெளிப்படுகிறது.

**வேளாண்மையின் அடிப்படைத் தத்துவம் உழவு :**

உழவில் தலையாய செயல் ஏர் கொண்டு உழுதல்.

**" தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்" (குறள்-1037)**

பெரும் கட்டிகளாக இருக்கின்ற வயல்மண் மிகச் சிறு கட்டிகளாக உடையும் வரை உழ வேண்டும். அஃதாவது புழுதியாகும் வரை உழ வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஒவ்வொரு சால் உழும் போதும் ஆழம் அதிகமாகிக் கொண்டே செல்லும் இவ்வாறு நன்கு உழுத மண்ணை உனக்கு (பொடிப் பொடியாக உதிரும் வண்ணம் நன்கு காய விடுதல்) வேண்டும். அவ்வாறு புழுதியான மண் காய்வதினால் காற்று உள்ளே புக ஏதுவாகும். பயிருக்கு நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் இதன் மூலம் புத்துயிர் பெறும். அதிகச் சத்துள்ள அடி மண் மேல் நோக்கி வருவதால் விதை விதைத்த உடன் வளரும். வெப்பத்தின் மூலமும் பறவையினங்கள் மூலமும் பயிருக்குத் தீங்கு செய்யும் பூச்சி வகைகளின் முட்டைகளும் கூட்டுப் புழுக்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**உழவனின் இலக்கணம் :**

ஒரு நல்ல உழவன் தன் நிலத்திலிருந்து கிடைக்கும் வைக்கோலைச் சேர்த்து வைத்திருப்பான் நாள்தோறும் உழுது ஏரைப் போற்றுவான் புன்செய் நிலத்தையும் திருத்துவான் எருவிடுவான் கலப்பையால் நிலத்தைப் பண்படுத்துவான். உழவுத்தொழிலின் முக்கியக் கூறுகளை வள்ளுவர்,

**"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"**

உழுவதைக் காட்டிலும் எருவிடுதல் தலையாயது இந்த இரண்டும் செய்த பின் களை நீக்க வேண்டும், களை நீக்கிய பின்னர் நீர் பாய்ச்ச வேண்டும். இவை அனைத்தையும் செய்த பின் எக்காலத்திலும் பயிரைக் காப்பது மிகவும் இன்றியமையாதது. ஒரு மிகப்பெரிய இலக்கை அடைவதற்கு அதைச் சிறு இலக்குகளாகப் பிரித்து ஒவ்வொரு சிறு இலக்கையும் செம்மையாக மேற்கொண்டால் மலைப்புத் தெரியாமல் பயணம் எளிதாக இருக்கும். அந்த மேலாண்மை தத்துவத்தையே வள்ளுவர் கையாண்டுள்ளார்.

எருவிடுதல் பற்றிய முரண்பட்ட கருத்துக்களை மேற்கண்ட இரண்டு குரல்களிலும் காணலாம் ஆனால், இந்த முரண்பாட்டிற்குள் ஒரு அறிவியல் உண்மை ஒளிந்துள்ளது அனைத்து வகை நிலங்களிலும் ஒரே மாதிரியான வேளாண்மை செய்வது இல்லை. காடுகள் நிறைந்த புன்செய் நிலமான முல்லை நிலத்தில் செய்யும் வேளாண் முறையும், வயற்பரப்புகள் நிறைந்த நன்செய் நிலமான மருத நிலத்தில் செய்யும் வேளாண் முறையும் வேறுபடும்.

புழுதி பறக்க உழுதால் ஒரு பிடி எருகூடத் தேவையில்லை என்று கூறியது முல்லை நிலத்திற்கும். உழுவதை விட எருவிடுதல் நன்று என்று கூறியது மருத நிலத்திற்கும் பொருந்தும்.

**முடிவுரை :**

இன்றையநிலை, இந்தியாவில் இருக்கும் தமிழகத்தில் இன்றளவும் உழவுத் தொழில் சிறந்ததாக காணப்படுகிறது. இத்தகைய உழவுத் தொழிலின் மூலம் விளையும் பொருட்களை இன்றளவும் உட்கொண்டு மக்கள் உயிர் வாழ்கின்றனர். செயற்கை உரம் தரும் சீரழிவை தவிர்க்க வேண்டும். மேலும் தரமான விலைப் பொருளுக்கு, நியாயமான எடை, மறைமுக ஏலம் மூலம் சரியான விலை கிடைக்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக விற்பனை செய்யவும். கண்காணிக்கவும் அக்மார்க் தர நிர்ணயம் செய்யவும் வேளாண்மை விற்பனைத்துறை தனியாகச் செயல்படுகிறது.

-----------------------------------------------------

**துணைநூற்பட்டியல் :**

1. திருக்குறள் வேளாண்மை – இல. செ. கந்தசாமி
2. பாலசுந்தரம்.ச, திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம் சென்னை. 2000
3. பத்மதேவன், தமிழ்ப்பிரியன் (உ.ஆ), நீதிநூல் களஞ்சியம், கொற்றவை வெளியீடு, 2014

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# இன்குலாப் கவிதை வெளிப்படுத்தும் மனிதம்

லூ.இக்னேசியஸ் சேசுராஜா, முனைவர் க.கமலா,

**Date of submission : 02-12-2025 Date of acceptance : 03-12-2025**
**Date of Publication: 30-01-2026**
**Corresponding auther's Name :Dr.K.Kamala**
**Email : kamaladr.sl@velsuniv.ac.in**
**Pages : 22 - 26**

**Abstract:**

Imagination is not the only reason for a creator to compose pomes, facts also roam around the poets soul .It is natural for the poet to not spread his wings towards the sky but to roam in the real earth in which we live. That is why the thought of the country becomes inevitable for the poet. The poets realized that life without country and languages is only moving and not successful. That is why poets from the Sangam period till today thought about the country very much.

"To meet a social need in the best possible way you must be at the head of your class and engage in the struggle with that class on all fronts.You must shatter the myth that art is apolitical" - Mayakovsky

There are many paths leading to human liberation. The philosophies that underpin each of them are beliefs, arts, and literature. All the philosophies leading to liberation can be divided into two categories, one is life-supporting and the other is life-denying.

**Keywords** படைப்பாளன்,கவிதைகள் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், மனிதம்

முன்னுரை

ஒரு படைப்பாளன்,கவிதைகள் புனைவதற்குக் கற்பனைகள் மட்டும் காரணமாக இருப்பதில்லை உண்மைகளும் கவிஞர்களின் உள்ளத்தைச் சுற்றி உலா வருகின்றன. ஆகாயத்தை நோக்கி மட்டும் தன் சிறகுகளை விரிக்காமல் நாம் வாழுகின்ற உண்மையான மண்ணில் புரள்வதும் கவிஞனுக்கு இயல்பாகிறது.அதனால் தான் நாட்டைப் பற்றிய சிந்தனை கவிஞனுக்குத் தவிர்க்க முடியாதாகிறது. நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாத வாழ்வு நகருமே தவிர வெற்றியைத் தராது என்பதை கவிஞர்கள் உணர்ந்திருந்தனர். அதனால்தான் சங்ககாலந்தொட்டு இன்றுவரை கவிஞர்களிடத்து நாட்டைப் பற்றிய சிந்தனை மிகுந்திருந்தது.

"ஒரு சமூகத் தேவையைச் சிறந்த முறையில் சந்திப்பதற்கு உனது வர்க்கத்தின் தலைமையில் நீ இருக்கவேண்டும்; அப்படி இருந்துகொண்டு அந்த வர்க்கத்தினரோடு எல்லா முனைகளிலும் போராட்டத்தில் ஈடுபடவேண்டும். அரசியலற்ற கலை என்ற கூட்டுக்கதையைத் தூள்தூளாக நொறுக்கிவிட வேண்டும்"(1) என்றான் மாயாகோவ்ஸ்கி
(ஆ.செகந்நாதன், புதிய கவிதைகளில் மார்க்கீயம் ப 68

மனித விடுதலைக்கு இட்டுச் செல்லும் வழிகள் எத்தனையோ இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் தாங்கும் தத்துவங்களாக நம்பிக்கைகள் அவற்றைச் சேர்ந்த கலைகள்,

லூ.இக்னேசியஸ் சேசுராஜா,, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் க.கமலா, (நெறியாளர் )பேராசிரியர்,
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

இலக்கியங்கள் எல்லாம் இருக்கின்றன. விடுதலைக்கு வழி சொல்லும் தத்துவங்களை எல்லாம் இரண்டு வகையாகப் பிரித்துவிடலாம் ஒன்று வாழ்க்கையை ஏற்பவை. மற்றொன்று வாழ்க்கையை மறுப்பவை

**மனிதவாழ்வு**

மனித வாழ்வு உயர்வானது, உன்னதமானது, வளர்ச்சியடைந்த பொறிகள் கொண்ட மனிதனால் வாழ்க்கையிலிருந்து எவ்வளவோ அனுபவங்களைப் பெறமுடிகிறது. அந்த அனுபவங்களை ஆராயவும் அவற்றினூடே ஒளிரும் உண்மைகளைத் தொகுத்துக் கொள்ளவும் அவனால் முடிகிறது. இந்த வாழ்க்கையில் அழகுகள் கொட்டிக்கிடக்கின்றன. வாழ்க்கையை எதிர் கொள்வதும் அதன் உயர்வையும் தாழ்வையும் ஆராய்வதும் பேரனுபவங்களுக்கு ஆளாவதும் வாழ்க்கை சார்ந்த உண்மைகளைக் கண்டடைவதற்கான வழியைத் திறக்க உதவுவதாகும். இவ்வழியில் நீண்ட பயணத்தை மேற்கொள்வது மனிதப் பிறவிக்கே கிடைத்த பெரும் வாய்ப்பாகும்.

கவிஞன் ஒருவன் தன் வாழ்க்கை அனுபவத்தில் கற்றதை தன்னுணர்ச்சி பாடல் மூலமே வெளிப்படுத்த அதிகம் விரும்புவான் அதுதான் அவன் கொண்ட உணர்ச்சியின் முழுமையையும் ஏற்றுக்கொள்ளும் கொள்கலமாக இருக்கிறது. அதுவே, மிகத் தூய்மையான கவிதையின் வடிவம் ஆகிறது. அதுமட்டுமின்றிக் கவிஞன் என்பவன், காலத்தின் கோலங்களைக் கருத்துமிக்க செயல்பாடுளை, வரலாற்று எண்ணங்களைச் சிந்தனையும் கற்பனையும் கலந்து உலகிற்கு வரையறுத்துக்காட்டும் 'கண்ணாடி' போன்றவன். மேலும் தான் வாழும் காலநிலை அறிந்து உணர்ந்து தேவைக்கேற்ப மரபு மாறாமல் பண்பாட்டிற்கு இழுக்கு வராமல் பா வடிக்க முயல்கிறான்.

**இலக்கியத்தில் மனிதம்**

“மனிதனை நேசிக்கிற எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுகிற உன்னதமான வாழ்க்கை நெறியே மனிதம்" ஆகும். இது சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகிறது. தன்னைப் பிரிந்து சென்ற காதலனை நினைத்து வாடும் காதலியை நோக்கி, மழைக் காலம் வந்துவிட்டது விரைவில் காதலன் வருவான் என்று ஆறுதல் கூறுகிறதோழி,

**“பூத்த பொங்கர் துணையொடு வதிந்த**
**தாதுண் பறவைபேதுறல் அஞ்சி**
**மணிநா ஆர்த்தமாண் வினைத்தேரன்**
**உவக் காண்தோன்றும் குறும்பொறை நாடன்”(2)**

(பா.வீரமணி, பட்டுக்கோட்டையின் பாட்டுத்திறம் ப-84)

என்று பாடுகிறான். காதலன், பூங்காவில் பூத்திருக்கும் மலர்களில் தேன் குடிக்கும் வண்டுகள் பயப்பட்டு அஞ்சுமே என்று கருணையோடு தன் தேரில் கட்டப்பட்டுள்ள மணியின் நாவை ஒலிக்காத வண்ணம் கட்டித்தேரை ஓட்டுவானாம். பல நாட்கள் பிரிந்து சென்று திரும்பும் வேளையிலும் வண்டினங்கள் மகிழ்வைச் சிதைக்கக் கூடாது என்று நினைத்த காதலனின் உள்ளம் சங்ககாலச் சமுதாயப் பண்பை உணர்த்துகிறது.

**மனிதம் என்பது என்ன?**

மனிதனுள் சுயநலம் வளர்ந்த போதே பொது நலமும் வளர்ந்துள்ளது; மனித காயங்கள் பெருகும் போதே மனித நேயங்களும் பெருகி வந்துள்ளன, அவை ஒன்றுக்கொன்று தொடர்பானவை, ஆனால் முரண்பாடானவை, மதத்தின் தேவை இல்லாமல் மனித குலத்தின் ஆற்றலினாலேயே மகிழ்ச்சியையும் தேவையையும் அடைய முடியும் என்று உறுதியாக நம்பும் தத்துவமே மனிதம். சுருக்கமாகச் சொன்னால் "எப்பொழுதும் பிறர்க்குத் துன்பம் தராத நிலையே மனிதம் எனலாம்.” இத்தகு மனிதம் சார்ந்த கூறுகளை தமிழ் இலக்கிய வரலாறு காட்டும் மனிதநேயப் படைப்பாளர்கள் வரிசையில் கவிஞர் இன்குலாபின் படைப்புகளின் வழிக் காணலாம்.

மனிதம் என்பதை கவிஞர் இன்குலாப்,

**"அன்புசெய்க! அன்பு என்பது செயல்...**
**அல்லல்படும் மக்களுக்கு**
**எதுதேவையோ அதை நிறைவு செய்வது அன்பு..**

ISSN :
: DOI :

**அது வெற்றுச் சொல் அல்ல.**

**பசி தீர்த்தல் துன்பம் துடைத்தல்" (3)**

(இன்குலாப்,மணிமேகலை,ப-126)

என்கிறார். உலக உயிர்களுக்கு முதல் தேவை உணவு அதை உலகத்திற்குக் கொடுப்பதில் தான் மனிதம் உண்டு அதைச் செய்ய பெருந்துணை அன்பு என்கிறார் கவிஞர்.

இதே கருத்தை பாரதி,

**"வயிற்றுக்கு சோறிடவேண்டும் – இங்கு**
**வாழும் உயிர்க்கு எல்லாம்**
**பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை**
**உயர்த்திடவேண்டும்"(4)**

(பாரதியார் கவிதைகள் ப.86)

என்று வாழும் உயிர்க்கு எல்லாம் சோறிடவேண்டும் என்கிறார். உடன் அதை கற்பிக்கவும் வேண்டும் என்கிறார் கல்வி என்பது அறியாமையைப் போக்கும் மருந்து உணவிற்குப் பின் அதனைக் கொடுக்கவேண்டும் என்கிறார்.

**மனிதமும் கலையும்**

கலை என்பது கருத்தை நிலை நிறுத்தி மனித சமுதாயத்தின் அமைதிக்கும் வாழ்விற்கும் வழி அமைப்பது ஆகும். கலையில் மனிதம் நிலைபெற்றால் மட்டுமே அது நெடுநாள் வாழும் தகுதியைப் பெறுகிறது. அதனைக் கவிஞர் இன்குலாப்,

**"கபிலரை மனிதன் என்பேன் மனிதத்தின்**
**உணர்வுகளை அந்த**
**அந்தச் சூழல்களில் நிறுத்திப் படைப்பது தான் கலை.**
**கபிலரும் இந்த உணர்வுப்பட்டவரே!"(7)**

(இன்குலாப், குறிஞ்சிப் பாட்டு ப-24)

கலையில் மனிதத்தின் உணர்வுகள் நிலை பெறவேண்டும் என்கிறார். இயற்கையின் படைப்பில் கலைஞன் வேறெந்த படைப்பும் செய்யாத செயலை மனிதன் மனிதனுக்குப் படைக்கிறாள்.

**வெய்யிலிடம் வேண்டுகோள்**

உழைப்பாளர்களையும் உழவர்களையும் சூத்திரர் என முத்திரை குத்தியவர்களை விலங்குகளாக எண்ணிய போக்கு உண்டு. ஆனால் அக்காலத்திலேயே 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றும் சுழன்றும் ஏர்ப் பின்னது உலகு என்றும், "இரவார் இரப்பார்க்கு கொன்று ஈவார்" என்றும் உழைப்பாளர்களான உழவர்களைச் சமுதாயத்துத் தலைமக்களாக்கியப் பெருமை திருவள்ளுவர்க்கு உண்டு.

**"இலபென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும்."(8)**

(மு.வ.உரை,திருக்குறள் ப.104)

என்று கூறி மக்களாகப் பிறந்த ஒவ்வொரு வரும் சோம்பித் திரியாமல் உழைக்க வேண்டும் என எச்சரிக்கிறார் வள்ளுவர்.

மானுடத்தைப் போற்றிய மறுமலர்ச்சிக் கவிஞல் ஷெல்லி, இங்கிலாந்து மக்களுக்கு' எனும் கவிதையில்,

**"இங்கிலாந்து மக்களே! உழைத்து உழைத்து**
**முனகுபவர்களே!**
**உங்களுக்குச் சொந்தமில்லாத அறுவடைகளை**
**அறுப்பவர்களே!**
**உங்களை அடக்கி ஆள்பவர்களுக்கு ஆடை**
**அணிகளை நெய்து**
**கொடுத்துவிட்டு, உங்களுக்கோ கொடிய குளிர்**
**வாடையையே**
**போர்த்திக் கொள்பவர்களே! உங்களைத்தான்!**
**கதகதப்பான**
**வீடு கட்டுபவர்களே நீங்களெல்லாம் அவர்களை**
**தொட்டில் முதல்**
**கடுகாடு வரை பேணிப் பாதுகாக்கிறீர்களே!**
**தம்மிடமுள்ள**
**எல்லாவற்றையும் அவர்களுக்கு வழங்கிவிடும்**
**கடவுளர்களைப்**
**போல் நீங்கள் இருக்கிறீர்கள்"(9)**

(பா.வீரமணி, பட்டுக்கோட்டையின் பாட்டுத்திறம் ப-84)

என்று தொழிலாளர்கள் கடவுளைப் போன்றவர்கள் என்றே கூறுகிறான். ஷெல்லியின் தாசனாகக் காலம் முழுதும் விளங்கிய பாரதியாருக்கு மேற் கண்ட கவிதையின் தாக்கம் மிகுந்திருந்தது எனலாம். பாரதியார் கடவுள் நம்பிக்கை உள்ளவர் மனிதர்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்த முடியும் என்று நம்பியவர்.

**"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே**
**யந்திரங்கள் வருந்திடுவீரே**
**கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே**
**கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே!**
**அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்**
**ஆயிரம் தொழில் தெய்திடுவீரே**
**பெரும்புகழ் நமக்கே இசைக்கின்றேன்**
**பிரமதேவன் கலையிங்கு நீரே!"(10)**

**(பாரதியார் கவிதைகள்,ப.458)**

என்று படைப்புக் கடவுளின் கலையாகவே பாட்டாளியைக் கண்டார். தேடிச் சென்றும் காணமுடியாத கடவுளைப் போல் அல்லாமல் கண் முன்னே நடமாடும் சுடவுளாக பாரதியார் காண்கிறார். இதே போல பாரதிதாசனும்,

**------------------------செந்தோட்**
**புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்**
**புதுநடையில் பூரித்தாள்விளைந்த நன்செய்**
**நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள் என்**
**நெஞ்சத்தில்குடியேறி மகிழ்ச்சி செய்தாள்(11)**
**(பாரதிதாசன் கவிதைகள் (அழகின் சிரிப்பு)**

என்று அழகு என்பவள் உழவனிடத்தும் கலைப் பையிலும் காட்சி தந்தாள் என தான் மகிழக் காரணமான உழைப்பைப் பாராட்டுகிறார்.

கவிஞர் இன்குலாப் மனிதத்தின் தன்மை உணர்த்துவதாக,

**"கரண்டிக் கொழுப்பவர்கள் உள்**
**சூட்டில் பொசுங்கவில்லை**
**சுரண்டப் படுபவர் தாம் – உள்**
**சூட்டில்பொசுங்குகிறார்**
**ஆகையினால் வெயிலே – ஏழை**
**ஆவி பிரிந்த உடல்**
**வேகையில் மட்டும்சுடு –அதுவரை**
**வீணில் பொசுக்காதே!"(12)**

(இன்குலாப் ஒவ்வொரு புல்லையும் ப-270)

என்று வெய்யிலிடம் வேண்டுகிறார். உழைத்து உடல் வருந்துபவர்கள் உழைப்பாளிகள். அவர்கள் உழைப்பாலே இவ்வுலகம் இயங்குகிறது. யார் அவரவர்கள் உழைப்பால் உயர்கிறார்களோ அவர்கள் வாழ்வு மிகவும் சொகுசாக உள்ளது. எனவே வெயிலே நீ தயவுசெய்து பாட்டாளிகளைப் பொசுக்காதே அவர்கள் இறந்த பிறகு மட்டுமே பொசுக்கு என்று வெயிலிடம் முறையிடுகிறார். இக்கவிதை, கவிஞரின் மனிதநேய உணர்வை வெளிப்படுத்துகிறது.

**தொகுப்புரை**

சமுதாயத்தில் மனிதநேயத்திற்கு எதிராகச் சுமத்தப்படு அத்தனையும் எதிர்க்கப் படவேண்டும் என்கிறார்.

--------------------------------------------

# பாரதிதாசன் உணர்த்திய தாய்மொழி வழிக்கல்வி

(வெ.கவிதா, முனைவர் அ.இருதயரர்ஜ்)

Date of submission : 10-12-2025 Date of acceptance : 22-12-2025
Date of Publication: 30-01-2026
Corresponding auther's Name :Dr.A.Irudhayaraj
Email : irudhayaraj.sl@velsuniv.ac.in
Pages : 26 - 28

பழமையை அறிந்து போற்றவும். புதுமையை உணர்ந்து ஏற்கவும் துணை செய்வது தாய்மொழி அறிவு. ஒருவனை உலகிற்கு வெளிப்படுத்திக்காட்டவும் தனிமனித வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் காரணமாய் அமைந்தது அவன் தன் மொழி மீது கொண்ட பற்றே, தன்னை உலகிற்குப் புதிய பரிமாணங்களில் ஒளிரச் செய்து, சுயமரியாதையோடு வாழவைக்கும் தமிழ்வழிக் கல்வியின் சிறப்புகளைப் பாரதிதாசன் தன் பாடல்களில் எவ்வாறு எடுத்துரைக்கின்றார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழ்ச் சமுதாயம்**

தமிழக மக்களின் அடிமை எண்ணத்திற்குக் காரணம் அவர்களின் நெஞ்சில் மண்டிக்கிடக்கும் சாதி வெறியே, எல்லாத் தமிழரும் சாதியையொழித்து இன்பத் தமிழகத்தை எய்துங்கள் என்கிறார். எழிலான தமிழகத்தையும் நல்வாழ்வையும் அடையத் தடைக்கல்லாக இருப்பது சாதி என்கிறார் பாவேந்தர். அதனால், "ஒழியாச சாதி ஒழிய வேண்டும்" என்கிறார். சாதியொழிந்தால் நாம் எல்லாத் துறைகளிலும் எதிர்பார்க்கும் முன்னேற்றம் அடைந்துவிடுவோம் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் ஊறு விளைவிப்பது சாதியும் மதமுமே என்பது பாவேந்தரின் முடிந்த எண்ணமாக உள்ளது.

**சாதி ஒழித்திடல் ஒன்று நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற்றொன்று**
**பாதியை நாடு மறந்தால் - மற்றப்**
**பாதி துலங்குவதில்லை**
**சாதிகளைத் திட்ட ஏரி நல்ல**
**தண்டமிழ் நீரினை ஏற்கும்**
**சாதிப் பிணிப்பற்றதோளே நல்ல**
**தண்டமிழ் வாளினைத் தூக்கும்!**

என்று பாரதியார் தனக்கு உரைத்திட்ட கருத்துக்களை மனதில் ஏற்றி பாரதிதாசன் தாம் படைத்த கருத்தோவியங்களில் எங்கெல்லாம் சாதி ஒழிப்பு கருத்துக்களைக் கூற முடியுமோ எனச் சிந்தித்து அங்கெல்லாம் பல பாடல் பாடியுள்ளார்.

**தாய்மொழி வழிக்கல்வி**

உலகின் செவ்வியல் மொழிகளில் ஒன்றாகத் திகழும் தமிழ்மொழி, செம்மாந்த இலக்கிய, இலக்கண வளங்களைப் பெற்ற சிறப்புக்குரிய மொழியாகத் திகழ்கின்றது. வளமார்ந்த தமிழர்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரிகம், அரசியல், வரலாறு, அறிவியல் முதலானவை இடம்பெற்றுள்ள தமிழ் இனத்துக்கும் தமிழ் நிலத்துக்கும் தமிழ் மொழிக்கும் பெருமைசேர்க்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவி தமிழ் வழியில் பாடங்களை நடத்ததேவண்டும் என்பதை,

**தமிழ்க் கல்விக் கழகம் நிறுவி**
**- -- --- --- --**
**தமிழ்ப் பேச்சால் தமிழ் எழுத்தால்**
**நடத்தல் வேண்டும்**

என்று சுட்டுகிறார். தாய்மொழியாம் தமிழ்வழிக் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதை,

**வி. கவிதா, முனைவர்பட்ட ஆய்வாளர்,**
**முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர், (நெறியாளர்)**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.**

என்ற கவிதை உணர்த்துகின்றது. தமிழ் வழியில் கற்பதால் தாழ்வுமனப்பான்மை நமக்கு தேவையில்லை. கவிஞர்கள் பலருக்கு வாழ்வுக் கொடுக்கக் கூடியது எனப்தை,

**தமிழ் மொழியில் தமிழ்ப்பாடல்**
**மிகவுண்டு தமிழ்க் கவிஞர்**
**பல்லோர் உள்ளார்**
**உமைத்தாழ்வு படுத்தாதீர்**

என்றும். மேலும், தமிழ்மொழி கீழான நிலைக்குச் செல்ல அனுமதிக்க மாட்டேடன். தன் உயிர் இருக்கும் வரைக்கும் அவற்றைக் காப்பேன் என்று கூறுகின்றார் பாரதிதாசன். இதனை,

**நாயினும் கீழாய்ச் செந்தமிழ்**
**நலிவதை நான் கண்டு**
**ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி**
**ஊழைத்திட நான் தவறேன்**

என்ற பாடல் மூலம் உணரலாம்.

**தமிழ் மரபை உணர்த்தும் கல்வி**

தமிழ் வழியில் கற்கும் மாணவர்களுக்கு தமிழ்பண்பாட்டு மரபான காதலும் வீரமும் உண்டாகும். அவர்கள உள்ளத்தில் இன்பம் பெருகும், துன்பங்கள் நீங்கி மனதில் தூய்மை உண்டாகும் என்று கூறுகின்றார். இதனை,

**இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்**
**என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் -**
**துன்பங்கள் நீங்கும் , சுகம்வரும் நெஞ்சினில்**
**தூய்மையுண்டாகிவிடும், வீரம் வரும்**

என்று கூறித் தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்பினைப் போற்றுகிறார்.

பிறமொழி மூலம் கட்டாயப்பதடுத்தி கற்க்கும் பொது தாய்மொழியின் வளர்ச்சி குன்றிவிடும் என்பதை,

**தமிழகத்தில் இந்தி திணிக்கச்**
**சுட்டம் செய்தார் அவரே**
**சாரும் குட்டையில் எருமை மாட்டை**
**தள்ளுகின்றார் அவரே**

என்ற கவிதை உணர்த்துகின்றது.

**இன உயர்வை அளிக்கும் மொழி**

தமிழ்ன் உயரவேண்டும் என்றால் தமிழ் உயர வேண்டும் என்ற சிந்தைனையை முன் வைக்கிறார். புhரதிதாசன். இதனை,

**தமிழுயர்ந்தால் தான் தமிழன் உயர்வான்**
**தமிழ்ப் பகையாளனும் தானே பெயவாள்**
**தமிழுயர்ந்தால் தான்!**

என்றும். மேலும், உயர்வையும் உணர்வுள்ள மனதனாகவும் ஆக்குவது தமிழ் மொழி என்பதை,

**உயர்வுற்ற தமிழ்மக்கள் உணர்வுற்ற நால்வாழ்வு**
**கருவுற்ற செந்தமிழ்ச் சொல் - ஒரு**
**கதியற்றறுப் போனதுண்டோ அடடா அந்த**

என்று குறிப்பிடுகிறார். தமிழ் மொழியின் சிறப்பினை உலகிற்கு உணர்த்திட பெண்களே வரும் கொண்டு எழுந்து வாருங்கள் எண்னு மொழியுரைமக்கு குரல் கொடுக்கின்றார் பாரதிதாசன். இதனை,

**ஒருவானில் பன்னிலவாய்**
**உயர்தமிழ்ப் பெண்களெலாம்**
**எழுக! ஊங்கள்**
**திருவான செந்தமிழின்**
**சிறுமையினைத் தீர்ப்பதென**
**எழுக! நீவிர்**

என்று குறிப்பிடுகிறார். தமிழ்த் தொண்டு என்று வந்துவிட்டால் முதியவரும் இளமையோடு செயல்படுவார் என்பதை,

**தண்டூன்றும் முதியோரே!**
**துமிழ்த் தொண்டென்றால் இளமை**
**துனை எய் தீரோ?**

என்று குறிப்பிடுகிறார். தமிழ் நாட்டில் காணப்படும் வணிக நிறுவனங்களுக்கு தமிழ்ப் பெயர் பலகை அமைக்க வேண்டும் என்று அரசு கட்டளைளிடவேண்டும் என்கிறார். இதனை,

**தமிழில் பெயர்பலகை**
**வாணிகர் தம் முகவரியை**

**வரைகின்ற பலகையில் ஆங்**

**கிலமா வேண்டும்?**

**மாணுயர்ந்த செந்தமிழால்**

**வரைக என அன்னவர்க்குச்**

**சொல்ல வேண்டும்**

என்ற கவிதை வழி உணர்த்துகின்றார். பிறமொழியை கற்றாலும் இனிய செந்தமிழ் மொழியை உயிராக நினைத்து வாழவேண்டும் என்பதை,

**ஆங்கிலத்தைக் கற்கையிலும்**

**ஆயல்மொழியைக் கற்கையிலும்**

**ஏந்த நாளும்**

**தீங்கனியைச் செந்தமிழைத்**

**தென்னாட்டின் பொன்னேட்டை**

**உயிராய்க் கொள்வீர்**

என்ற கவிதை வழி உணர்த்துகின்றார். பாவேந்தர் தம்முடைய ஆத்திசூடியில் மதமான பேய் என்பதொன்றிருப்பதல்லது பேய் என்று வேறு ஒன்று கிடையாது என்னும் பொருளில் பேயி(ல்)லை மதம(ல்)லால் என்று கூறுகின்றார். இந்தக் கருத்தையே தொடர்ந்து வலியுறுத்தும் பாவேந்தர்

**ஒரு மதமும் வேண்டாம் - தம்பி**

**உண்மையுடை யோர்க்கே**

**பெருமதங்கள் என்னும் - அந்தப்**

**பேய் பிடிக்க வேண்டா**

என்கிறார். மதத்தின் பெயரால் மக்களின் அறிவு மழுங்கடிக்கப் படுகிறது; அவர்களின் பொருள்கள் பாழக்கப்படுகின்றன. ஏராளமான சமூகத் தீங்குகள் மதத்தால் விளைகின்றன என்கிறார் பாவேந்தர்.

**முடிவுரை**

மக்கள் நெஞ்சில் மண்டிக்கிடக்கின்ற சாதியை அழித்திது தமிழ் சமுதாயத்தைத் தழைத்து வளரச் செய்வதும்; தமிழர்களின் வாழ்வியலில் பண்பாடு, மரபு, அரசியல் வரலாறு, அறிவியல் ஆகியவை சிறந்து விளங்கவும் தாழ்வுமனப்பான்மை நீங்கவும் தமிழ் மரபை நிலைநிறுத்தவும் தமிழி வழி கற்றல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எனவே பல்கலைக்கழகங்களை நிறுவி தமிழ் வழியில் கற்பிக்கவேண்டும் அப்படி கற்பித்தால் தமிழ்ச் சமுதாயமும் தமிழ் மொழியும் செழித்து வளரும்

-------------------------------------------------------

துணைநின்றவை

1. பாரதியார், பாரதியார் கவிதைகள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ப) லிட், சென்னை.
2. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் தொகுதி தொகுதி 1, நர்மதா பதிப்பகம் , சென்னை.
3. பாரதிதாசன், தமிழியக்கம், நர்மதா பதிப்பகம் , சென்னை.
4. பாரதிதாசன், தாயின் உள்ளம் மகிழ்கிறது, நர்மதா பதிப்பகம் , சென்னை.
5. பாரதிதாசன், வேங்கையே எழுக, நர்மதா பதிப்பகம் , சென்னை

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# தமிழர்களின் தாவர உணவுகள்

(முனைவர் பெர்,குபேந்திரன்)

**ஆய்வுச் சுருக்கம்**

உணவின்றி உயிர்வாழவே முடியாது. எனவே மனிதனின் முதல் தேடல் முயற்சியாக உணவவே இருந்தது. பழங்கள், காய்கறிகளைத் தொடக்க காலத்தில் உண்ட மனிதன் படிப்படியாக உணவைச் சமைக்கவும் அதனைப் பயன்படுத்தவும் கற்றிருக்கலாம். எனவே மனிதன் உயிர்வாழ அவசியமானது உணவு. உணவு இல்லையேல் உயிர்கள் வாழ முடியாது. இந்த உணவின் தன்மை இடத்திற்கேற்பவும், சூழலுக்கேற்பவும் மாறுகிறது. அனைவரும் ஒரே மாதிரியான உணவை உண்பதில்லை. மக்கள் அவர்களுக்கு எளிதில் கிடைக்கும் உணவுப்பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அதிகம் உண்கின்றனர். அந்த வகையில் சங்க காலத்தில் மக்கள் அதிகம் தாவர உணவுகளைச் பயன்படுத்தி உண்டனர் விளக்கமுறை ஆய்வுக்கொண்டு விரிவாக விளக்கப்படுகின்றன.

**Date of submission : 10-01-2026 Date of acceptance : 22-01-2026**
**Date of Publication: 30-01-2026**
**Corresponding auther's Name :Dr.P.Gubendiran**
**Email : gubendirensl@vistas.ac.in**
**Pages : 29 - 32**

**முன்னுரை**

உண்-உணா-உணவு என்பதில் உண் என்பது அடிச்சொல்லாக அமைகிறது. அடிச்சொல்லின் அடிப்படையில் உண்ணப்படுவது அனைத்தும் உணவு என கருதத் தோன்றும். உடல் நலம் உள்ளவனுக்கு உணவாக பயன்படும் கஞ்சி நோயற்றவனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. எனவே உண்ணப்படுவதெல்லாம் உணவாகும் என்பதை எளிதில் உணரலாம். உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலை தரும் பொருளை உணவென்று கூறுவர் .எனவே வாய் வழியாக உட்கொள்ளப்பட்டு உயிர் வாழ்வதற்கும் உடல்நலத்திற்கும் தீங்கு விளைவிக்காத இன்றியமையாத உணவுகளைச் சமைத்து உண்டவன் தமிழன் .

கிளறித் திருத்திப் பயன்படுத்துவதாகும் என்கிறார் சித்பவானந்த.( சையத் ஜாகீர் ஹசன், நீதி நூல்களில் கல்வி,ப.3) காய் வகைகளை காம்பு கலைந்து சீவியும் கழுவியும் மீதமுள்ளவற்றை அவித்தும் மஞ்சள், மிளகு அல்லது மிளகாய் வற்றல், சீரகம், கொத்தமல்லி, தேங்காய் முதலியவற்றை மை போல அரைத்தும் கலைந்தும் இஞ்சி வெங்காயம் வெள்ளைப்பூண்டு பெருங்காயம் கராம்பூ ,கருவாப்பட்டை, ஏலம், சோம்பு முதலியவற்றை மீண்டும் அளவு சேர்த்தும் வெந்தபின் புளிஅல்லது எலுமிச்சை சாறு விட்டும் கடுகு, கருவேப்பிலை முதலென தூவியும் ஆவின் நெய்யில் தாளித்தும் முதன் முதலில் குழம்பைக்கொதிக்க வைத்து உண்டவன் தமிழன் தான் என்பதை அறிவியல் களஞ்சியத்தின் வழி அறியலாம். இப்படி உணவையே மருந்தாக உட்கொண்ட தமிழர்களிடம் தாவரங்கள் எவ்வாறு மருந்தாக பயன்பட்டன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்..

**தாவரங்கள்**

சங்கப் புலவர்கள் பெரிதும் தாவரங்களின் மலர்களைப் பற்றி குறிப்பிடுகின்றனர். ஆயினும் அவற்றின் தண்டு இலை முதலியவற்றை பற்றி கூறும் புலவர்களும் இருந்துள்ளனர். சான்றாக கூடல் கொன்றை பற்றி கணிமேதாவியாரும், புன்னையைப் பற்றி விளைச்சநாரும் வரகு பற்றி கபிலரும் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளனர்.நெய்தல்,குளவி,பாலை முதலிய

**முனைவர் பொ,குபேந்திரன், உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117**

தாவரங்களின் பெயர்களைக் கண்டுபிடிக்க புலவர்களின் பாடல்கள் துணை செய்கின்றனர்.

**தாவரங்களின் பயன்கள்**

தமிழ் இலக்கியங்களில் தாவரங்கள் பற்றி பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. பழந்தமிழர் தம் வாழ்வில் மருத்துவத்திற்காகத் தாவரங்களை பயன்படுத்தியுள்ளனர் . தமிழக மக்களின் அகவாழ்விலும் புற வாழ்விலும் தாவரங்களின் பயன்பாடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதனை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இத்தகைய இயற்கை வாழ்வை மக்கள் தொண்றுத்தொட்டு இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் தாவரங்கள் பலவித நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைகளாக பயன்படுகின்றன .தாவரங்களில் பல வைட்டமின் சத்துக்கள் உள்ளன. வீட்டுக்கு தேவையான பொருள்கள் செய்யவும் விளையாட்டுப் பொருள்கள் செய்யவும் பயன்படுகின்றன. மேலும் தாவரங்களின் பயன்பாடு மிக முக்கியமானதாகத் தமிழர்களின் வாழ்வில் இருந்துள்ளது.

**உணவிற்காக பயன்படும் தாவரங்கள்**

தமிழகத்தில் பெரும்பாலும் மலைப்பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் வாழுகின்ற மக்கள் தங்கள் பகுதியில் கிடைக்கின்ற தாவரங்களையே பெரிதும் நம்பி வாழ்கின்றனர். காடுகளில் மனிதன் தனியாக உதவி இன்றி வாழும் காலங்களில் தாவரங்களையே உணவாக பயன்படுத்தி உள்ளான். மனிதர்கள் காடுகளில் கிடைக்கும் பச்சை காய்கறிகள் பசுங்கீரைகள் பூக்கள் பழங்கள் விதைகள் கிழங்குகள் மற்றும் வேர்களையே உணவாக உண்டு வாழ்ந்து வருகின்றனர் உணவாகும் இந்தத் தாவரங்களை முற்றிலும் அழியா வண்ணம் பயன்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான தாவரங்களை நன்றாக அறிந்திருப்பதும் அவற்றின் சுவையையும் இவர்கள் நன்கு அறிந்துள்ளனர். இந்த தாவரங்களில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் தங்களுக்கு நீண்ட ஆயுளையும் வீரியமிக்க ஆரோக்கியமான வாழ்வையும் அளிப்பதாக பெரிதும் நம்புகின்றனர் .இவற்றில் சாமை, திணை, வரகு போன்ற உணவு தானியங்களை உண்பதால் அதீத ஆற்றல் பெறுவதாகவும் மனிதர்கள் நம்புகின்றனர் .மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அத்தனை உணவு பொருட்களையும் தாவரங்கள் தருகின்றன. உயிரினங்கள் எல்லாவற்றிலும் முற்பட்ட பிறப்பு தாவர இனத்தைச் சார்ந்தது ஆகும். பாசிகளும் புல் பூண்டுகளும் தான் பல கோடி உயிரினங்களாக இன்று கிளைத்திருக்கின்றன. இவ்வாறு தாவர வகைகளுள் ஒன்றான கீரை வகைகளை மனிதன் எவ்வாறு பயன்படுத்தி உள்ளான்.

***கீரை வகைகள்***

கீரை வகைகளில் எண்ணற்ற வகைகள் இருந்த போதிலும் அவற்றை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தலாம்..

- குத்துச்செடி வகை கீரை
- செடி வகைக் கீரை
- கொடி வகைக் கீரை
- மனமுள்ள இலை வகைக் கீரை
- கிழங்கினைக் கீரை
- மரவகைக் கீரை

***குத்துச்செடி வகை கீரை***

இவ்வகைக் கீரைச் செடிகள் நிலத்தில் சிறிது உயரம் மட்டுமே வளரக்கூடியது அல்லது உயரம் மிக குறைவாக வளர்ந்து அதிகமான கிளைகளுடன் காணப்படும் இதனை மிகச்சிறு செடிகள் அல்லது குத்துச்செடிகள் என்று குறிப்பிடுகின்றோம் .அரைக்கீரை, சிறுகீரை ,வட்டசாரணை முதலியன இவ்வகை இனத்தைச் சார்ந்தவயாகும்.

***செடி வகைக் கீரை***

இவ்வகைக் கீரைகள் பொதுவாக ஓரடி முதல் மூன்று அடி வரை வளரக்கூடியவை. மூன்று அடிக்கு மேலும் சில வகைகள் வளர்கின்றன .பொதுவாக இவ்வகைச் செடிகளில் இலைகளை மட்டும் பறித்து கீரையை உணவாக

பயன்படுத்துகிறோம் .மூக்கிரட்டைக் கீரை ,வேளைக் கீரை, துத்திக் கீரை முதலியன இவ்வகை செடிகளுக்கு உதாரணமாக இருக்கின்றன.

**கொடி வகைக் கீரை**

இவ்வகை கீரைகள் பொதுவாக வேளியின் மீது கொடியாகப் படர்கின்றன. சில வகைக் கீரைகள் நிலத்தில் சிறிது உயரம் வளர்ந்து பிறகு நிலத்திலே படர்பவை செடி வகைக் கீரைகளைப் போலவே இவற்றை பறித்து உணவாக பயன்படுத்துகின்றோம். முடக்கத்தான் கீரை, கோவைக்கீரை, கொடி பாலைக்கீரை, வட்டச்சாரணை முதலியன இவ்வகையைச் சார்ந்த கீரை வகைகள் ஆகும்.

**மணம் உள்ள இலைவகைக் கீரைகள்**

இந்த வகை கீரைகள் உணவுக்கு மணமூட்டுவதாக விளங்குகின்றன. கீரையாக மட்டுமின்றி உணவுக்கு மணமூட்டும் பொருள்களாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை கீரைகளில் மனம் கொடுக்கும் எண்ணெய் சத்துக்கள் நிறைந்து இருக்கின்றன. கொத்தமல்லி, சதக்குப்பை, புதினாக்கீரை போன்றவை இவ்வகைகளைச் சார்ந்ததாக அறிஞர்களால் சுட்டப்படுகின்றன..

**கிழங்கினை வகைக்கீரைகள்**

கீரைகள் கிழங்கிலிருந்து பெறப்படுபவை இவைகளில் கிழங்குகள் உணவாக பயன்படுத்தப்படுவதோடு இலைகளும் கீரை உணவாக பயன்படுத்தப்படுகின்றன. முள்ளங்கிக் கீரை ,சேப்பங்கிழங்கு கீரை ,பீட்ரூட் கீரை, டர்ப்பணிக்கீரை போன்றவை இவ்வகை இனத்திற்கு சான்றாக அமைகின்றன.

**மரவகைக் கீரைகள்**

மரவகை கீரைகள் என்றும் நிலத்தில் இருந்து ஆண்டு முழுவதும் பலன் கொடுத்து நிலைத்து பல ஆண்டுகள் பூமியிலேயே வாழக்கூடியவை. முருங்கைக்கீரை அகத்திக்கீரை, இலச்சுகா கொட்டைக்கீரை ,கறிவேப்பிலைக்கீரை போன்றவற்றை இவ்வயையில் அடக்கலம்.

**உணவில் பயன்படுத்தும் முறை**

கீரை வகைகள் சமைத்து சாப்பிடப்படுகிறது.உடம்பில் தசை நார்களை மென்மைப்படுத்தும் ஆற்றல் பெற்றது .இத்துடன் தோல் முதலியவற்றிற்கு மென்மைத் தன்மையையும் அழகும் பளபளக்கும் கொடுப்பதற்கு உணவோடு சேர்த்து சங்ககால மனிதர்களால் உண்ணப்பட்டுள்ளது.

பாசிப்பயிறு, தட்டப் பயிறு ,கொள்ளு ,முதலியவற்றுடன் இந்தக் கீரை வகைகளைச் சேர்த்து வேக வைத்து சமைத்துள்ளனர். இவ்வாறு வேகவைத்து கீரையை உண்பதனால் கீரையில் புதைந்துள்ள சத்துக்கள் அனைத்தும் பயிர்கள் மூலமாகவும் பெறப்படுகிறது என்பதை சங்ககால மக்கள் உணர்ந்துள்ளனர்.

இதன் மூலம் மக்கள் தனது உடல் சூட்டை தணித்து பசியைத் தூண்டி உணவை ஏற்கும் தன்மை உடையதாக உடலை மாற்றுகின்றது என்பதையும் மருத்துவத்திலும் உணர்ந்து கூறப்பட்டுள்ளது அதனால் சங்க கால மக்கள் கீரையை அதிகம் பயன்படுத்தி உள்ளனர்.

இப்படி கீரைகள் மருத்துவ குணம் உள்ள கீரைகள் என பல வகை கீரைகளை நம்மால் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது குறிப்பாக வேலைக்கீரை, கரிசலாங்கண்ணி கீரை அரைக்கீரை, கருவேப்பிலை போன்றவை உணவில் மிக முக்கிய பங்கு வகித்துள்ளன.

**முடிவுரை**

மண்ணில் விளைந்த கீரை வகைகளை நம் முற்கால மனிதர்கள் மிக அழகாக உணவில் பயன்படுத்தி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தனர். என்பதனை இக்கட்டுரை வழி நம்மால் அறிய முடிகின்றது..

---

**துணைநூற்பட்டியல்**

11. ஆனந்தம் வி.வி.வி., தாவர உணவும் இயற்கை நல வாழ்வும், வித்யா பப்ளிகேஷன், சென்னை 1990.

Volume: 01 Issue -01: ISSN :
January to March 2026 : DOI :

2. ராஜகோபால். ஈணு.பெ.மு, தமிழ் மருத்துவப் பாடப் பயிற்சி நூல், மதுரை சித்த மருத்துவர் குருகுலம், மதுரை, 1970.

3. கணேசன் சே , இலக்கியத்தில் மருத்துவம், கவிதா பப்ளிகேஷன், சென்னை 2009.

4. கிருஷ்ணன் .பெ, தீராத நோய்களும் சித்த மருத்துவம், அன்பரசு பதிப்பவன், திருத்தணி, 1994 .

5. கோவிந்தன். த, பண்டைய மருத்துவமும் பயன் தரும் மூலிகைகளும், திருமகள் நிலையம், சென்னை 1989.

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# உவமையில் சிறந்தவன் கம்பன்

(முனைவர் ச. பிரியா)

Date of submission : 02-01-2026 Date of acceptance : 20-01-2026
Date of Publication: 30-01-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : priya.sl@velsuniv.ac.in
Pages : 33 - 39

**முன்னுரை** : கம்ப ராமாயணம் ஒரு தேன் கூடு என்றால் அது மிகையாகாது; தேன் கூட்டைப் பிழியப் பிழிய வரும் தேன் போல மனித வாழ்வியலின் நுட்பங்களையெல்லாம் தம் கை வண்ணத்தால் பக்தி சிறப்பிலும் , கதைச் சிறப்பிலும் சிறந்து விளங்குகின்ற இராம காதையில் அமைத்து , அழகுக்கு அழகு செய்தாற் போல விருத்தம் என்னும் பா வகையில் சொல் நயம், பொருள் நயம், உவமை நயம் , பிற அணி வகைகள் ,கற்பனை வளம் ஆகியன பொருந்தி வரும்படி, சந்தத்தோடு இயைந்து கம்பர் பாடியதால் தான் ஏனைய மொழி இராமாயணங்களை விடவும் இக்காவியம் சிறந்து விளங்குகிறது எனலாம் ; சந்தனத்தைத் தொட தொட கை மணப்பது போல கம்பராமாயணத்தைப் பயிலுந்தோறும் நெஞ்சமும் இனிக்கவே செய்கிறது.

அவ்வகையில் இந்நூலில் பயின்று வந்துள்ள உவமைகள், கம்பனின் இலக்கண உத்தி முறையையும் அவனது ஆழ்ந்து அகன்ற அறிவின் நுண்மான்நுழைப் புலத்தையும் எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த வாயில்களாகத் திகழ்கின்றன ; " உவமையில் சிறந்தவன் கம்பன்" என்னும் கருத்தின் அடிப்படையில் இந்நூலில் கையாளப்பட்டுள்ள உவமையின் சிறப்பும் அதன் ஆளுமையின் திறம் குறித்தும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரையின் களம் அமைகின்றது.

**உவமை** : புலவர்கள் தாம் படைக்கும் பொருளினை எடுத்துரைக்க பொருள் விளக்கத்திற்காகவும் சிறப்புக்காகவும் இழிவுக்காகவும் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளனர் ; அதனடிப்படையில் "உவமவியல்" என தனி இயல் அமைத்து அதன் வழி நான்கு வகையான உவமைகளில் முப்பத்தாறு உவம உருபுகளை இனங் கண்டிருக்கும் தொல்காப்பியரின் உவமவியல் சார்ந்த அறிவினைக் கம்பரின் படைப்பிலும் காண முடிகின்றது . இதனைத் தொடர்ந்து பிற அணி இலக்கண நூல்கள் கூறும் அணி வகைகளையும் இந்நூலில் ஒப்பிட்டு பார்க்க இடமளிக்கிறது . பிற்கால அணிகளுக்கெல்லாம் தாயணியாக இருக்கக்கூடிய உவமையணி பற்றி மட்டுமே விளக்கயுரைப்பதாகவும் அவற்றுள் ஒரு சில உவமைகளை மட்டும் இக்கட்டுரையில் எடுத்துக் காட்டவும் முற்பட்டுள்ளேன்.

கம்பன் மிகச் சிறந்த ஆய்வாளன் – பண்பாளன் :

கம்பன் தனக்கு முன் தோன்றிய வால்மீகியின் வடமொழி இராமாயணத்தைத் தழுவி இந்நூலைப் படைத்திருந்தாலும் இது தழுவல் இலக்கியமல்ல , சங்க இலக்கியம் போல திருக்குறள் போல தமிழ் மொழியில் படைக்கப்பட்ட மூல நூல் போலவே கம்ப ராமாயணமும் திகழ்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது ; தமிழ் பண்பாட்டினை உணர்த்தி தமிழ் மொழியிலேயே மூழ்கி ஆய்ந்து தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து படைக்கப்பட்ட தமிழரின் பண்பாட்டு பெட்டகமாக கம்பராமாயணம் படிப்பவரை நினைக்க வைக்கிறது . இவ்வகையில் கம்பனை மிகச் சிறந்த ஆய்வாளனாகவும் மொழி பெயர்பாளனாகவும் உணரச் செய்கிறது ;

செருக்கு ஏதுமின்றி தன்னை சிறுமையாளனாக சிறுப் பிள்ளையாக எத்தனாக பித்தனாக இகழ்ந்துக் கூறிக் கொள்ளும் நிலையிலும், தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலின் புகழைப் பாடி பாடி நன்றிச் செலுத்துவதால் சிறந்த பண்பாளனாகவும், சந்த நயத்தில் கற்பனை என்னும் தேனைச் சேர்த்து சொல்லின்பத்தில் நம்மை யெல்லாம் மூழ்கச் செய்த மிகச் சிறந்த

முனைவர் ச. பிரியா உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117

கவிஞனாகவும் , பொருள் நயத்தை உணர்த்த உவமை நயத்தால் படிப்பவரின் உள்ளத்தையெல்லாம் கொள்ளையடிக்கச் செய்த கம்பன் மிகச் சிறந்த உவமையாளனாகவும் கல்வியாளனாகவும் காட்சி அளிக்கின்றான் ; கம்பனின் புலமையை எண்ணியெண்ணி மகிழவே ஒரு பிறவி போதாது என்னும் உண்மையைக் கம்பனைக் கற்குந் தோறும் உணர வைக்கிறான் .

நாட்டுப் பழமொழிகள், நாடக வழக்கு , உலக வழக்கு , உலகத்து மக்களின் பயன்பாட்டுப் பொருட்கள் ,செடி கொடிகள், பறவைகள் மற்றும் விலங்குகள் இவற்றின் குணங்களை மனிதனின் இயல்போடு ஒப்பீடு செய்ததில் மிகச் சிறந்த உளவியலாளராகவும், இவற்றையெல்லாம் உவமானமாக பயன்படுத்திய அறிவு நிலையில் ஒப்பீட்டுத் தன்மையில் சிறந்த படைப்பாளனாகவும் நம் நெஞ்சினில் என்றும் வாசம் செய்கிறான். ”கல்வியில் பெரியவன் கம்பன்” என்னும் வாக்கிற்கு தலை வணங்கி நிற்க செய்கிறான்.

போர்க்களக் காட்சியைச் சித்தரித்துக் காட்டுவதில் நாடகக் கலைஞனாகவும், பல காட்சியமைப்புகளை ஓவியக் கூடமாகச் சித்தரித்துக் காட்டுவதில் சிறந்த ஓவியனாகவும், கற்போரைப் பக்தி வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்யும் போது மிகச் சிறந்த இராம பக்தனாகவும், அறநெறியினை உணர்த்தும் பொழுது மிகச் சிறந்த அறநெறியாளனாகவும் காட்சி தருகின்றான்; சொற்களைக் கையாள்வதில் ஆகச் சிறந்த கலைக் களஞ்சியமாகவும் காட்சி தருகிறான் .

இவ்வாறாக கம்ப ராமாயண நூலினைக் கற்குந் தோறும் கம்பனின் பல்வேறு திறன்களால் நம்மையெல்லாம் கட்டிப் போட்டாலும் அவனது உவமைத் திறனைக் கண்டு வியந்து , “கம்பன் ஓர் உவமையாளன்” என்னும் தலைப்பில் கட்டுரை அளிக்க முயன்ற போது அவனது உவமை நயங்களையெல்லாம் கண்டு உள்ளம் சிலிர்த்து வியந்தும் போனேன் என்று சொன்னால் அது மிகையாகாது. கம்ப ராமாயணம் முழுமையும் பொருள் புலப்பாட்டுக்காக கற்பனைச் சிறகை விரிக்கச் செய்து மிகச் சிறந்த உவமைகளைக் கம்பர் கையாண்டுள்ளார் ; தொல்காப்பியர் கூறுவது போல உலகத்தார் ஏற்கும் வகையில் உவமைகள் கையாளப்பட்டிருப்பது சிறப்புடையதாக இருக்கின்றது.

நூலின் தொடக்கம் முதற்கொண்டு நூலின் இறுதிவரையிலும் கம்பரின் உவமை நயங்கள் கொட்டிக் கிடக்கின்றன . அவற்றுள் இயற்கையழகினை வர்ணிப்பதிலும், கதாபாத்திரங்களின் தன்மையையும் அதன் சிறப்பையும் எடுத்துக் காட்டும் உத்தி முறையிலும் அழகிய நுணுக்கமான உவமைகளைக் கம்பர் கையாண்டுள்ளார். அவற்றுள் சில ,

பாற்கடலும் பூனையும் : கம்பர் அறநெறியில் மாறுதலின்றி வெற்றி வாகைச் சூடிய இராம பிரானுடைய திருவரலாற்றினை அதிலுள்ள ஆசை காரணமாக நான் மொழிகிறேன் ; இதில் இராமனின் பெருமை , புகழ், சிறப்பு, இராம நாமத்தை உச்சரிப்போர் அடையும் பெரும்பேறு என யாவற்றையும் அடக்கிக் கூறி விட முடியாது . குற்றமில்லாத இராமனை பாற்கடலோடு ஒப்பிட்ட கம்பர் , கடல் அளவு பெருமையுள்ள இராமனின் பெருமையினை விளக்க முனைவதென்பது , ஒரு பூனையானது பாற்கடல் முழுமையும் சுவைத்துப் பருக வேண்டும் என்னும் ஆசையைப் போன்று இது விளங்கும் என்று கம்பர் தன்னை சிறு விலங்காகிய பூனையோடு ( பூசை ) ஒப்பிட்டுக் காட்டுகின்றார் . அவையடக்கப் பாடலிலேயே தன்னை தாழ்த்திக் கொண்டு இராமனின் பாதம் தொட்டு வணங்கி நூலைப் படைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

**”ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு**
**பூசை முற்றவு நக்குபு புக்கென**
**ஆசை பற்றி அறையலுற் றேன் மற்றிக்**
**காசில் கொற்றத்து இராமன் கதை யரோ”**

-(கம்ப.அவையடக்கப் பாடல் :4)

என்பதால் கல்வியில் பெரியவனாகப் போற்றப்படும் கம்பரின் தன்னடக்கம் ஒவ்வொரு மனிதர்க்கும் வேண்டப்படுகிறது.

**நொய்ய சொல்லன் :** வடமொழியில் இராமாயணம் இயற்றிய வால்மீகியின் சொல்லாற்றலின் ஏற்றமும் பெருமையும் கூறி

தன் சொல்லை 'நொய்ய சொல்' ( நொய் – எளிமை ; எளிய சொல் ) என்று தன்னடக்கத்தோடு கூறுகிறார் ; தவ முனிவர்கள் சொல்லும் சினச்சொல் தவறாது தாக்குதல் போன்று பெருமையுடைய இராமனின் வரலாற்றை உரைத்த தவ முனிவனான வால்மீகியின் சொல் 'தவன் சொல்' ( தவன் – உயர்ந்த ; உயர்ந்த சொல்) என்றும், அவரைத் தழுவி தான் படைக்கயிருக்கும் இராம காதை எளிய சொற்களால் படைக்கப்பட்டுள்ளது என்று 'விருத்தமென்னும் ஒண்பாவிற்கோர் கம்பன்' தன்னை பணிவாக எடுத்துக் காட்டியிருப்பது கற்றவர்க்கேயுரிய ஒழுக்கத்தைக் காட்டுகிறது. இதனை, "நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற் றேன் எனை" (கம்ப.அவையடக்க பாடல்.5)என்னும் பாடலடியால் அறியலாம். மேலும், இலக்கண அறிஞர்கள் பலரும் தான் படைக்கும் இப்படைப்பில் பிழை இருந்தால் தன்னை மன்னிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றார்.

**"துறை யடுத்த விருத்தத் தொகைக் கவிக்கு**
**உறை யடுத்த செவிகளுக் கோதில் யாழ்**
**நறை யடுத்த அசுணநன் மாச் செவிப்**
**பறை யடுத்தது போலும் என் பா அரோ"-**
(மேலது.பாடல்.7)

பல விகற்பங்களையுடைய விருத்தப் பாடல்களைக் கேட்டு மகிழும் அறிஞர்களுடைய செவிகள் இனிய யாழிசைக் கேட்டு மகிழும் 'அசுணம்' ( பறவை/ விலங்கு) என்னும் உயர்ந்த விலங்குக்கு (மாச் செவி என்பதால் , இங்கே அசுணம் என்னும் உயிரினத்தை விலங்காகக் கொள்ளலாம். மா – விலங்கு ) நிகராகும் என்கிறார். அத்தகைய விலங்குக்குத் துன்பம் நேருமாறு மிகுந்த பறையொலி கேட்பது போல என்னுடைய பாடல்கள் இருக்குமோ? என்று தன் பாடல்கள் உயரிய சந்தத்தில் அமையாமல் போகுமோ? என்று அச்சம் கொண்டு கேட்கிறார் ; மேலும், அவ்வாறு பிழைகள் இருப்பின் பித்தனும் பேதையரும் சொல்லும் வார்த்தைகளை ஆராயாமல் பக்தி பரவசத்தால் இராமன் மீது கொண்ட பக்தியால் , நான் உரைக்கும் இவ் விருத்தப்பாக்களை ஆராயாமல் முத்தமிழ் அறிஞர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்ளும் திறத்தை,

**"முத்த மிழ்த் துறை யின் முறை போகிய**
**உத்த மக்கவி கட்கொன்று உணர்த்துவென்**
**பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்**
**பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"-**
(மேலது.8)

என்னும் பாடலால் அறியலாம். மேலும் தன் படைப்பில் தவறுகள் ஏதேனுமிருப்பின் அதனைச் சிறுபிள்ளைச் செய்த செயல் போல எண்ணி, தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை,

**"அறையும் ஆடரங் கும்படப் பிள்ளைகள்**
**தரையிற் கீறிடில் தச்சருங் காய்வரோ**
**இறையு ஞானமி லாத என் புன்கவி**
**முறையின் நூலுணர்ந் தாரும் முனிவரோ"**.-(மேலது.9)

என்னும் பாடலால் கேட்டுக் கொள்கின்றார் . விசாலமான அறைகளும் நடனம் ஆடுகின்ற அரங்குகளும் உள்ள நிலத் தரையில் சிறு பிள்ளைகள் கீற்றுக்களை வரைந்தால் சிற்ப நூலில் வல்லவர்கள் இச்சிறுவர்கள் சிற்பக் கலைக்குப் புறம்பாக வரைந்தார்கள் எனச் சீற்றம் கொள்வார்களோ? கொள்ள மாட்டார்கள். அது போலவே பேரறிஞர்களும் என்னுடைய கவிதைகளை "ஞானமில்லாது செய்தான்" என்று என் மீது சினங் கொள்ள மாட்டார்களென்று உரைப்பதால், கம்பனின் அடக்க உணர்வு சான்றோர்க்கேயுரிய அணியாகத் திகழ்வதை உணர முடிகின்றது. இதனைத் தான் வள்ளுவரும் , பெருமைக்குரியவர்கள் என்றும் பணிவோடு இருப்பார்கள் என்றும் சிறுமைக்குரியவர்கள் எப்போதும் தம்மையே வியந்து புகழ்ந்து கொள்வார்கள் என்று பணிவின் சிறப்பினை,

**"பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து" – (குறள்.978)**

என்னும் குறளில் எடுத்துக்காட்டுகின்றார். வள்ளுவர் கூறும் சான்றோரின் பெருமைக்குக் கம்பர் இலக்கணமாகத் திகழ்வதை அறிய முடிகின்றது.

**மருத நிலத்தின் சிறப்புரைத்தல் :** மருத நிலத்தின் சிறப்பினை உணர்த்த வந்த கம்பர், மருத நிலத்தினை அரசனாக உருவகித்து அவன் இனிது மகிழ்ச்சியுடன் வீற்றிருத்தலையும் , அவன் கொலு மண்டபத்தில் காலை ஞான்று, அரசாட்சி புரிதலையும் ஏத்தி உரைத்துள்ளார். சோலையில் மயில்கள் ஆடுதல் , மேகம் முழங்கி மழைத் துளிகளைச் சொரிய விளங்கும் கால நிலைகளை அழகுப் பட உவமித்துக் கூறியுள்ளமை இயற்கை மீது கம்பர் கொண்ட காதலை உவமித்துக் காட்டுகிறது.

**"தண்டலை மயில்கள் ஆடத்**
**தாமரை விளக்கம் தாங்கக்**
**கொண்டல்கள் முழவின் ஏங்கக்**
**குவளைகண் விழித்துநோக்கத்**
**தெந்திரை எழினி காட்டத்**
**தேம்பிழி மகர நாழின்**
**வண்டுகள் இனிது பாட**
**மருதம்வீற் றிருக்கும் மாதோ**

.-(கம்ப.நாட்டுப்.36)

பொய்கையில் விளங்கும் தாமரைத் தடாகத்தின் பக்கங்களில் விளங்கும் பசுமையான சோலைகளில் மயில்கள் அசைந்து நடனம் ஆடவும், செந்தாமரை மலர்கள் விளக்குகளை ஏந்துமா போன்று மலர்ச்சியை நல்கவும் , மேகங்கள் முழவு இயம்பவும் , குவளை மல்ர்கள் மங்கையர் விழிகளைப் போல மலர்ந்து நோக்கவும், தெளிந்த நீரலைகள் திரைச்சீலை என நயமுடன் அசைந்து காட்டவும் , இனிய தேனை ஒத்த மகர யாழின் இசை போன்று வண்டுகள் ரீங்காரம் செய்ய , மருதம் என்கிற அரசன் இனிது வீற்றிருந்தான்.

மகளிரின் அழகுக்கு ஒப்புமை : மருத நிலத்து வயல்களில் உழவுத் தொழில் செய்யும் பெண்களின் உடலுறுப்புகளை அம்மருத நிலத்தில் பூத்துள்ள பல மலர்களுக்கு ஒப்புமைப்படுத்தியுள்ள பாங்கு சிறப்புக்குரியது. அப்பாடல்,

**"பண்கள் வாய் மிழற்றும் இன்சொல்**
**கடைசியர் பரந்து நீண்ட**
**கண் கைகால் முகம் வாய் ஒக்கும்**
**களையலாற் களையி லாமை**
**உண்கள்வார் கடைவாய் மள்ளர்**
**களைகிலாது உலாவி நிற்பார்**
**பெண்கள் பால் வைத்த நேயம்**
**பிழைப்பரோ சிறியோர் பெற்றால்". –**

(கம்ப.நாட்டுப்.42)

என்பதாகும். உழவர் பெண்களின் வாயானது மெல்லப் பண்களை இசைத்து விளங்க , அவர்தம் கண்களும், கைகளும் கால்களும் முகமும், வாயும், கருங்குவளை , தாமரை, ஆம்பல் என்னும் மலர்களை ஒத்திருந்தன ; அவர்கள் மீது காதல் கொண்டவர்களாய் மதுவுண்டு மயங்கிய நிலையில் அவ் வுழவர்கள் , வயல்களின் ஊடே விளங்கும் அம்மலர்களைத் தம் காதலியர் கண்களாகவும் கை, கால் , முகம், வாய் எனவாகவும் கருதிக் களை பறிக்காது உலாவினர் . மகளிர்பால் அன்பு வைத்த இளைஞர்களின் நிலையினை மருத நிலத்து மலரோடும் அம்மலரினை வட்டமிடும் வண்டோடும் ஒப்பிட்டுக் காட்டும் கம்பரின் கவித் திறனை வியக்காதவர் தானுண்டோ .?

மகளிரும் வண்டினமும் : பருவ மங்கையர் தம் தாமரைப் போன்ற முகத்திலுள்ள மையுண்ட கண்ணைப் பெண் வண்டெனக் கருதிய ஆண் வண்டுகள், அதன்பால் காமுற்று நாள்தோறும் அம்மருத நிலத்தில் தங்கி விட்ட செய்தியினை,

**" பருவ மங்கையர் பங்கய வாள்முகத்து**
**உருவ உண்கணை ஒண்பெடை யாம் எனக்**
**கருதி அன்பொடு காமுற்று வைகலும்**
**மருத வேலியின் வைகின வண்டரோ".**

(நாட்டுப்படலம்.55)

என்னும் கலி விருத்தப்பாவால் அறியலாம்.

**மகளிரும் அன்னப் பறவையும் :**

**"சேலுண்ட ஒண்க ணாரின்**
**திரிகின்ற செங்கால் அன்னம்" –(நாட்டுப்படலம்.45)**

வயல்களில் உழவுத் தொழில் செய்யும் மகளிரின் நடையைக் கண்ட அன்னப் பறவை இப்பெண்களிடம் நடைப் பயில வந்ததாகவும் ,அந்த அன்னப் பறவைகளானது , தன் கன்றினை

நினைத்த மாத்திரத்தில் பால் சொரியும் எருமைகளின் பாலை அருந்தி விட்டு தாமரை மலரில் உறங்கத் தொடங்க , அப்பண்ணையிலுள்ள தவளைகள் எழுப்பும் குரல் தாலாட்டுப் பாடலை இயம்புவது போல இருந்தது என்கிறார் கம்பர் .

**மேகமும் எருமையும் :** கம்பர் மருத நிலத்தில் கொட்டிக் கிடக்கும் இயற்கை அழகினைக் காட்சி படமாக்கி நம் கண்முன் கொண்டு வருவதில் வல்லவராக இயற்கையின் காதலராகவே நமக்கு தென்படுகிறார். வானத்திலிருந்து மழைத் தாரைகள் சொரிந்து நெற்பயிர் வளர்தலைப் போன்று , இங்கு மேகம் போன்ற கரிய நிறமுடைய எருமைகள் வெண்மையான பாலை மழைத் தாரை போல் சொரிகின்ற தன்மையை உரைக்கும் உவமை நயம் இன்புறுத்தக்கது.

**"ஈர நீர்படிந்து இந்நிலத் தேசில**
**கார்கள் என்ன வருங்கரு மேதிகள்**
**ஊரில் நின்ற கன்று உள்ளிட மென்முலை**
**தாரை கொள்ளத் தழைப்பன சாலியே".-**

(நாட்டுப்படலம்.57)

என்னும் பாடலடிகளால், கரிய மேகத்தை எருமையின் நிறத்திற்கும் மழைத் தாரைக்கு வெண்மை நிற பாலும் ஒப்புமையாயின.

**தேனை நுகரும் மலர் போல :** வயல்களிலுள்ள நெற்கதிர்களையும் நறுமணம் கமழும் பொழிலின் கண் மேவும் மரங்களிலுள்ள முதிர்ந்த கனிகளையும், கொல்லைப் புறங்களில் விளைவனவாகிய துவரை முதலிய பருப்பு வகைகளையும், படர்ந்து வளரும் கொடி வகைகள் தரும் பொருள்களையும் , குழித் தோண்டி நட்டுப் பயிராகும் மஞ்சள் , இஞ்சி போன்ற பொருள்களையும், இம்மள்ளர்கள் மலரிலிருந்து தேனை நுகரும் வண்டினம் போல கொள்வார்கள் என்கிறார் கம்பர்.

இதனை , "மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்"என்பதனால் அறியலாம். இவ்வாறாக வளங்கொழிக்கும் மருத நிலத்தை மட்டுமல்லாது பேய் உடல் போல வெடித்துச் சிதறிய பாலை நிலத்தையும் வருணிக்கும் திறன் கம்பரின் கவித் திறனுக்கு மேலும் ஒரு சான்று.

பாலை நில வருணனை : பாலை நிலமானது வெயிற் காலம் தவிர வேறு மழை முதலான காலம் எதனையும் அறியாமையால் அந்நிலத்தைக் காணும் அக்கினி தேவனின் நெஞ்சமும் சுடும் ; அந்நிலத்தைப் பார்த்த நேரத்தில் அவனது விழியும் வெந்து போகும் என்கிறார்.

**"பரிதி வானவன் நிலம் பசையறப் பருகுவான்**
**விருது மேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோர்**
**இருது வேறு இன்மையால் எரிசுடர்க் கடவுளும்**
**கருதின் வேம் உள்ளமும் காணின் வேம் நயனமும்".**

- ( தாடகை வதைப் படலம் : 346)

என்னும் பாடலால் பாலை நிலத்தின் தன்மையை ஒருவாறு அறிய முடிகின்றது . மேலும் பாலை நிலத்தின் கொடுமையினைப் பற்றிக் கூறும் போது , அந்த நிலப் பகுதியிலுள்ள வெப்பத்தை உரைத்தால் நாக்கு வெந்து போகும் ; உலகம் முழுமையும் மூடி மறைக்கும் இருளும் வெந்து போகும் ; வான் முகடும் வெந்து போகும்; உதயமாகும் சூரியனும் வெந்து போவான் ; அவ்விடத்தில் தோன்றும் மழை , மின்னல் , இடி போன்றவையும் வெப்ப மிகுதியால் தீய்ந்து போகும் என்கிறார் .

**யானையும் பாம்பும் :** வெப்ப மிகுதியால் முழக்கம் செய்கின்ற யானையானது , நிழலை நாடித் திரிந்து எங்கும் கிடைக்காமையால் கொடிய பசியோடு புரண்டும் வாயைத் திறந்து கொண்டும்ம் வாடுகின்ற பாம்பின் வாய்க்குள் இதுவே நிழல் என்று புகும்.இதனை,

**"புழுங்குவெம் பசியொடு புரளும் பேரரா**
**விழுங்க வந்து எழுந்து எதிர் விரித்த வாயின் வாய்"**

**-( மேலது.352)**

என்னும் வரிகளால் அறியலாம்.

**கரிய மேகமும் கரிய காகமும் :** பாலை நிலத்தின் வெப்ப மிகுதியை பொறுக்கமாட்டாமல் வானின் கண் தவழும் கரிய மேகங்களும் வடவைத் தீயென வாட்டும் பெருந் தீயால் கரிந்து வீழ்ந்தன. இக்காட்சி கரிய காகங்களும் யானைகளும் கரிந்து விழுந்தன போன்று இருந்ததாக ,

**"ஏகவெங் கனலரசு இருந்த காட்டினில்**

**காகமும் கரிகளும் கரிந்து சாம்பின**
**மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட**
**மேகமும் கரிந்து இடை வீழ்ந்த போலுமே".**

(மேலது. 353 )

என்னும் பாடலால் எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் குறிப்பிடும் வினையின் அடிப்படையில் உவமைகள் ஆளப்பட்டுள்ளமையும் புலனாகின்றது.

**நெறியின் புறம் செலாக் கோசலம் :** பால காண்டத்தின் முதற் பகுதியாகிய ஆற்றுப் படலத்தில் கோசல நாட்டிற்கு அணியாகத் திகழ்கின்ற 'சரயு நதி' பற்றியும் அந்நதியின் சிறப்புப் பற்றியும் கூற வந்த கம்பர், பல உவமைகளை அந்நதியினில் பாய்ந்தோடச் செய்துள்ளார்.

**"ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்**
**காச லம்பு முலையவர் கண்ணெனும்**
**பூச லம்பு நெறியின் புறம் செலாக்**
**கோச லம்புனை யாற்றணி கூறுவாம்".**

-(கம்ப.ஆற்றுப்படலம்.13)

என்கிறார். இராம பிரான் ஏகபத்தினி விரதன் என்னும் மெய் திகழ் கூற்றினையொட்டி அந்நாடாகிய கோசலமே பிறன்மனை நோக்காத பேராண்மை கொண்டு திகழ்தலை இங்கு, "நெறியின் புறம் செலாக் கோசலம்" என உணர்த்துகிறார்.

**கண்ணை இமைக் காப்பது போல :** விசுவாமித்திர முனிவன் தேவர்களின் பொருட்டுச் செய்த அருமையான வேள்வியானது, பிறரால் எண்ணிப் பார்ப்பதற்கும் அரியதாய் விளங்கியது. ஆறு நாட்கள் நடைப்பெற்ற இவ்வேள்வியை நிலவுலகத்தைக் காக்கும் தசரனின் மைந்தர்கள் கண்ணை இமைக் காப்பது போல் காத்தார்கள். இதனை,

**"எண்ணுதற்கு ஆக்கரிது இரண்டு மூன்று நாள்**
**விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை**
**மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்**
**கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்".**

-( கம்ப.வேள்விப் படலம்.458)

என்பதால் அறியலாம். இத்தகு சிறப்புடைய வேள்வி எண்ணுதற்கும் அரியது. பிறரால் செய்வதற்கும் அரியது என்பதால், விசுவாமித்திரனை யன்றி வேறு எவராலும் செய்வதரிது என்பது தோன்ற, "எண்ணுதற்கு ஆக்க அரிது" என உரைக்கப்பட்டது.

இராமன் வேள்விச் சாலையின் நான்கு புறத்திலும் சுற்றிக் கண்டு கண்காணிப்பு செய்யவும், இலக்குவன் வேள்விச் சாலையின் முகப்பில் நின்று கொண்டு அரக்கர்களால் இடையூறு வராதபடி காவல் காத்து நின்றான் ; இராமன் வலமாகச் சுற்றி வந்து இலக்குவனைத் தட்டி எச்சரிக்கும் பாங்கு மேல் இமைக் கீழ் இமையைத் தொட்டுக் கண்ணைப் பாதுகாக்கும் தன்மையால் இராமன் மேல் இமைப் போல் அசைந்தும் உலாவியும், இலக்குமனன் கீழ் இமைப் போல் நிலைத்து ஓரிடத்தில் நின்றும் கண்ணெனும் வேள்வியைக் காத்தனர் என்கிறார் கம்பர். இவர்கள் நிலவுலகத்தைக் காக்கும் இயல்புடையவர்கள் ஆதலால் இச்செயல் இவர்களுக்கு எளிமையும் திறலுடைமையும் ஆகும் என்பதனையும் எடுத்துரைக்கின்றார்.

படைக்கலன்கள் இராமனை அடைதல் : ஒரு பிறவியில் செய்த நற்செயலின் பயனானது அடுத்த பிறவியில் தாமாகவே வந்த டையும் என்னும் கருத்தை,

**"ஆறிய அறிஞன் கூறி அளித்தலும் அண்னல் தன்பால்**
**ஊரறிய உவகை யோடும் உம்பர்தம் படைகள் எல்லாம்**
**தேறிய மனத்தான் செய்த நல்வினைப் ப்யன்கள் எல்லாம்**
**மாறிய பிறப்பில் தேடி வருவபோல் வந்த தன்றே".**

(கம்ப.வேள்விப் படலம்.419)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம். காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாச்சரியம் ஆகிய ஆறு குற்றங்களும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் குற்றங்களும் தணிந்த விசுவாமித்திரன், மூன்று காலங்களின் செயல்களையும் அறிந்தவனாகி இராம பிரானுக்குத் தெய்வப் படைகளை உரிய மந்திரங்களுடன் ஓதி வழங்கிய அளவில், அவை தெளிந்த மனத்தியுடையவன் செய்த நல்வினைப் பயன்

அடுத்த பிறவியில் தாமாகவே மாறி வருதலைப் போன்று அக்கலைகள் யாவும் இராமனை அடைந்தன என்கிறார். இங்கே வினைகளை உவமையாக்கியுள்ள திறம் போற்றுதலுக்குரியது.

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து". – (குறள்.398)**

என்னும் குறளின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மாரீசனின் நிலை : கானகத்தில் தனியாக இருக்கும் சீதைக்கு மாயமான் காட்டி அவளை ஏமாற்ற வேண்டுமென இராவணன் மாரீசனைப் பணித்த பொழுது, மாரீசன் அடைந்த துயர நிலையினை , மீன்கள் வாழும் நஞ்சு கலந்த நீருக்கு உவமையாகக் காட்டுகின்றார். மீன்கள் வாழும் தேங்கிய நீரில் நஞ்சு கலந்தால் மீன் இறக்க நேரிடும் ; நீர் நச்சுத் தன்மை அடைந்து விட்டது என உணர்ந்து நீரை விட்டு வெளியேறினால் நீரில்லாமல் மீன் வாழாது. அது போல அந்த மீனின் நிலையைத் தான் அடைந்ததாக மாரீசன் புலம்புவதை சிறந்த பொருத்தமான உவமை வாயிலாக கம்பர் எடுத்துக்காட்டுகின்றார். மாரீசனின் மனநிலைக்கு மீனும் , தன்னைச் சார்ந்தவரை அழிக்கும் இராவணனின் தீய குணத்திற்கு நஞ்சும் உவமைகளாயின .

**"வெஞ்சுற்றம் நினைந்து உகும் வீரரை வேறு**
**அஞ் சுற்று மறுக்குறும் ஆழ் குழி நீர்**
**நஞ்சு உற்றுழி மீனின் நடுக்குறுவான்**
**நெஞ்சு உற்றது ஓர் பெற்றி நினைப்பு அரிதால்".** _(கம்ப. மாரீசன் வதைப் படலம்)

என்னும் பாடலால், மீன் தங்கிய நீர்நிலை நஞ்சானது என்னும் உவமை, இராவணன் மனதில் கலந்திட்ட நஞ்சினை எடுத்துக்காட்டுகிறது. நஞ்சு கலந்த நீரில் துடிக்கும் மீனின் நிலை இராவணனோடு இருக்கும் மாரீசனின் மனநிலைக்கு உவமையாயிற்று.முடிவாக,

இவ்வாறாக கம்ப ராமாயணம் நூல் முழுமையும் உவமையின் ஆளுமைகள் நிறைந்துள்ளன. அவற்றுல் ஒரு சில உவமைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தெவிட்டாத தேனடையின் ஒரு துளி தேனாகவே இக்கட்டுரை அமைகின்றது. நூல் முழுமையும் ஆளப்பட்டுள்ள உவமைகள் குறித்து பல ஆய்வுகள் செய்ய இந்நூல் இடம் தருகிறது என்றால் அது மிகையாகாது.

-----------------------------

**துணை நூல்கள் :**

1.கம்ப ராமாயணம் மூலமும் உரையும், திருமகள் நிலையம் , சென்னை.முதற் பதிப்பு : மார்ச்.2008.

2.திருக்குறள் – மக்கள் உரை, முனைவர் கு. மோகனராசு, மணிவாசகர் நூலகம், சென்னை. 18 ஆம் பதிப்பு : செப்.2007.

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# Redefining Boundaries: Emerging New Media Artists in India and the Rise of Digital Expression in 2025

Kalaiselvan. S

Date of submission : 10-12-2025 Date of acceptance : 15-12-2025
Date of Publication: 30-01-2026
Corresponding auther's Name :Mr.S. Kalaiselvan.
Email : hodanimation@velsuniv.ac.in
Pages : 40 - 42

## Abstract

In 2025, India's contemporary art landscape is experiencing a dynamic shift driven by the rise of emerging new media artists who are redefining artistic expression through technology and innovation. Artists such as Deena Pindoria, Akshay Bhoan, and Ritika Sharma are gaining significant recognition for their cutting-edge work that blends digital tools with cultural narratives. Their practices reflect a growing trend where traditional boundaries of visual art are being challenged and expanded. Furthermore, initiatives like the Diriyah Art Futures (DAF) Emerging New Media Artists Programme are providing crucial platforms for Indian artists to engage with global digital art movements. This article explores the contributions of these pioneering figures and examines how programs like DAF are shaping the future of new media art in India.

## 1. Introduction

The Indian visual art scene has traditionally drawn from a rich reservoir of history, mythology, and craftsmanship. However, in the last decade, a noticeable shift has occurred as artists begin to incorporate digital tools and new technologies into their creative processes. With the increasing accessibility of virtual reality, augmented reality, artificial intelligence, and blockchain platforms, a new generation of Indian artists is emerging—one that challenges the conventions of physical media and embraces the potential of the digital realm. In 2025, this movement has gained critical mass, marking a transformative era for contemporary Indian art.

## 2. Understanding New Media Art in the Indian Context

New media art is an umbrella term encompassing artworks created with or mediated through digital technologies. This includes interactive installations, video art, digital painting, AI-generated visuals, and NFT-based artworks. In India, the adoption of new media was initially slow due to limited infrastructure and access. However, recent technological advancements, affordable digital tools, and global exposure have accelerated its adoption.

Indian artists are now not only participating in international dialogues but also bringing localized, culturally rooted perspectives to global platforms.

## 3. Emerging Voices: Artists to Watch in 2025

### Deena Pindoria

Known for her immersive digital environments, Deena Pindoria combines traditional Indian textile patterns with generative algorithms. Her installations often explore diasporic identity and the emotional residue of migration. Her recent work, "Digital Sareescape," layers AR overlays on handwoven motifs, allowing viewers to navigate between physical heritage and virtual reimaginings.

### Akshay Bhoan

Akshay Bhoan's transition from photography to digital storytelling reflects a deep engagement with social themes.

Mr.Kalaiselvan. S, HOD and Assistant Professor, Dept. of Animation, Vels Institute of Science Technology and Advanced Studies, Chennai-117.

His interactive video installations use facial recognition and motion sensors to explore urban alienation and personal data ethics. His series "City.exe" presents the viewer with dynamic urban scenes that respond in real-time to audience movement, critiquing surveillance culture.

**Ritika Sharma**

Ritika Sharma brings a unique feminist perspective to the digital art sphere. Her VR-based installations place the viewer inside emotionally charged environments drawn from Indian domestic life. In her celebrated piece "Inside the Kitchen," viewers navigate a hyperreal domestic space that critiques gender roles through symbolic interaction with everyday objects.

**4. The Role of Diriyah Art Futures and Other Initiatives**

International programs like the Diriyah Art Futures (DAF) Emerging New Media Artists Programme have played a pivotal role in promoting Indian talent on global platforms. DAF, launched as a cross-cultural digital arts incubator, provides mentorship, funding, and technical training for artists working at the intersection of art and technology. Several Indian artists, including Bhoan and Sharma, have benefited from such initiatives, gaining international residencies and exposure.

Additionally, institutions like the Khoj International Artists' Association and the Serendipity Arts Foundation continue to host residencies, workshops, and festivals that encourage experimentation with new media. These platforms are helping to build a sustainable ecosystem for digital art in India.

**5. Cultural Identity and Technology: A New Synthesis**

What makes this new wave of Indian digital artists distinct is their ability to interweave local identities with global technologies. Rather than abandoning tradition, these artists reinterpret Indian cultural motifs, rituals, and social issues through digital mediums. This approach offers a layered narrative—where ancestral memory coexists with digital innovation.

For instance, AI-generated visuals based on folk art patterns or sound installations using field recordings from Indian villages demonstrate how new media can deepen, rather than dilute, cultural expression.

**6. Challenges and Future Directions**

Despite growing visibility, challenges remain. These include limited public funding, lack of digital infrastructure in rural and semi-urban regions, and inadequate archiving of digital works. Furthermore, institutional recognition of new media art in India is still evolving, with traditional galleries often reluctant to exhibit time-based or interactive works.

However, the future is promising. With increasing collaborations between artists, technologists, and academic institutions, and the rise of blockchain-backed art markets like NFTs, new media art in India is poised for exponential growth. Government-backed digital initiatives under the "Digital India" umbrella may also indirectly benefit artists in this domain.

**7. Conclusion**

The year 2025 marks a significant turning point for new media art in India. Artists like Deena Pindoria, Akshay Bhoan, and Ritika Sharma exemplify how technology can be used not just as a tool, but as a medium to tell compelling, culturally nuanced stories. As platforms like the Diriyah Art Futures Programme continue to support innovation, India's digital art future looks vibrant and globally interconnected. This convergence of technology and tradition is redefining what it means to be an Indian artist in the 21st century

## REFERENCES

1. "Art and Technology in India" Author: Nalini Malani Publisher: Marg Publications

2. "Contemporary Indian Art: Other Realities" Author: Yashodhara Dalmia ,Publisher: Marg Foundation

3. “New Media Art" Author: Mark Tribe & Reena Jana, Publisher: Taschen

4. "Digital Art" Author: Christiane Paul, Publisher: Thames & Hudson

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
: DOI :

# The Art of Storyboarding: A Research Perspective

Mr.A.Kalimuthu. MFA (PhD)

**Date of submission : 02-01-2026 Date of acceptance : 03-01-2026**
**Date of Publication: 30-01-2026**
**Corresponding auther's Name : Mr.A.Kalimuthu. MFA (PhD)**
**Email : Kmuthu.smc@vistas.ac.in**
**Pages : 43 - 45**


## Abstract

Storyboarding is a crucial pre-production tool used across the film, animation, video game, and advertising industries. It functions as a visual blueprint that maps out the narrative flow, visual composition, timing, and transitions between scenes. This paper explores the historical development, theoretical frameworks, techniques, and contemporary practices in storyboarding. It examines the storyboard's role in bridging the gap between script and visual execution, analyzes its evolution with digital tools, and assesses its significance as both an artistic and communicative medium. Through a review of literature and case studies, the study emphasizes the storyboard's interdisciplinary value and its ongoing relevance in modern visual storytelling.


## Introduction

Storyboarding is often referred to as the visual scripting of narrative media. Originating in the early 20th century with studios like Walt Disney, storyboarding has grown from a simple sequence of sketches into a sophisticated planning method used in various media industries. Storyboards serve as a communication tool between directors, cinematographers, animators, production designers, and editors. With the rise of digital tools, storyboarding has evolved into a hybrid discipline involving art, design, narrative theory, and technology. This research investigates the art and methodology of storyboarding, highlighting its foundational role in the creative process.

## Discussion

Historical Evolution of Storyboarding: The practice of storyboarding began in the 1930s with Disney Studios, most notably used for planning Steamboat Willie and Snow White and the Seven Dwarfs. Early storyboards were large panels pinned on walls, reviewed and edited collaboratively. Over time, this practice became a

standardized part of production pipelines in both animation and live-action filmmaking.

Artistic and Narrative Techniques: Storyboarding combines illustration, graphic design, and cinematic language. It uses shot types (close-up, medium shot, wide shot), camera movements (pan, tilt, zoom), and transitions (cuts, dissolves, wipes) to pre-visualize how a story unfolds. Artists must understand pacing, framing, spatial relationships, and emotional beats. A well-crafted storyboard balances clarity with creativity, serving both technical and aesthetic purposes.

Digital Transformation: With software like Storyboard Pro, Photoshop, and Blender, artists can create storyboards that incorporate 3D modeling, animatics, and real-time feedback. Digital tools allow for collaborative cloud-based workspaces, version tracking, and integration with post-production tools. This has increased efficiency while also expanding the creative possibilities for pre-visualization.

Mr.A.Kalimuthu. MFA (PhD), Assistant professor , Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai-117.

Interdisciplinary Applications: Beyond film and animation, storyboarding is used in UX design, instructional design, game development, and advertising. In education, storyboarding fosters visual literacy, critical thinking, and narrative skills. In business, it aids in pitch presentations and product design.

Challenges and Future Directions: One challenge is maintaining the balance between artistic vision and production constraints. Another is adapting to rapid technological changes while retaining the core communicative power of hand-drawn or sketched visuals. The future may see greater integration of AI, VR, and interactive storyboarding platforms.

Visual Storytelling in Ancient and Prehistoric Periods

Visual storytelling is one of humanity's earliest and most universal forms of communication, emerging long before the invention of writing. In prehistoric times, humans used cave paintings, petroglyphs (rock carvings), and symbolic artifacts to convey stories, preserve knowledge, and express cultural beliefs. Iconic sites such as the Lascaux caves in France and Altamira in Spain showcase vivid depictions of animals, hunting scenes, and abstract symbols created with natural pigments. These visual narratives served practical purposes—documenting important survival information about animal behavior and seasonal patterns—as well as spiritual or ritualistic functions connected to early human belief systems.

Such prehistoric artworks acted as communal memory tools, enabling knowledge transmission across generations in societies without written language. They strengthened social bonds by sharing collective experiences and myths. For example, hunting scenes might not only record a successful hunt but also serve as a ceremonial appeal for future abundance.

As civilizations developed, visual storytelling became more sophisticated and formalized. In ancient Egypt, murals and hieroglyphics combined imagery and text to narrate religious myths, royal achievements, and funerary journeys. The walls of tombs often depicted the deceased's path through the afterlife, illustrating moral lessons and divine encounters. Similarly, Mesopotamian cylinder seals featured intricate pictorial narratives, telling stories of gods, kings, and heroic exploits. In the Indus Valley, seal impressions combined symbols and images to communicate trade, status, or spiritual ideas.

In sum, visual storytelling in ancient and prehistoric periods was a vital tool for cultural transmission and identity formation. It bridged the gap between lived experience and memory, shaping the foundation for all subsequent narrative arts.

Conclusion

The art of storyboarding remains an indispensable element in the visual storytelling process, serving as the foundational bridge between a narrative's conceptualization and its realization on screen. Through its evolution from simple hand-drawn sketches in early animation studios to sophisticated digital tools today, storyboarding has consistently provided creators with a powerful medium to visualize, plan, and communicate complex sequences of action, emotion, and spatial relationships. It enhances collaboration across creative teams by offering a shared visual language that clarifies intentions, reduces production risks, and streamlines workflow.

Moreover, storyboarding is not limited to filmmaking but extends to various fields such as animation, video games, advertising, and UX design, demonstrating its versatility and interdisciplinary value. The blend of artistic skill, narrative understanding, and technological innovation inherent in

storyboarding exemplifies its role as both an art and a science. As technology advances, integrating AI, virtual reality, and real-time collaboration, the future of storyboarding promises even greater immersion and interactivity.

Ultimately, storyboarding's enduring significance lies in its ability to translate abstract ideas into visual sequences that resonate emotionally and intellectually with audiences. It remains a vital storytelling tool that nurtures creativity, supports efficient production, and shapes the way stories are told in a rapidly evolving media landscape.

---

**Literature Review**

1. Hart, John. The Art of the Storyboard: A Filmmaker's Introduction (Second Edition). Focal Press, 2020. This book provides a comprehensive look at traditional and digital storyboarding techniques.
2. Bateman, Connor, and Jason Mittell. Complex TV and Visual Planning. NYU Press, 2021. This book discusses how contemporary TV uses pre-visualization strategies, including advanced storyboarding.
3. Schüle, Andreas. "From Script to Screen: Pre-Visualization Techniques in the Digital Age." Journal of Visual Culture, vol. 20, no. 2, 2021, pp. 188–204.
4. Jirout, Jamie. "The Cognitive Benefits of Visual Sequencing and Storyboarding in Media Education." Media Psychology Review, 2022.
5. Online source: "The Future of Storyboarding in the Digital Age." Adobe Creative Blog, 2023. https://blog.adobe.com/en/publish/2023/05/10/storyboarding-future-of-visual-planning

**References**

1. Hart, John. The Art of the Storyboard: A Filmmaker's Introduction. 2nd ed., Focal Press, 2020.
2. Bateman, Connor, and Jason Mittell. Complex TV and Visual Planning. NYU Press, 2021.
3. Schüle, Andreas. "From Script to Screen: Pre-Visualization Techniques in the Digital Age." Journal of Visual Culture, vol. 20, no. 2, 2021, pp. 188–204.
4. Jirout, Jamie. "The Cognitive Benefits of Visual Sequencing and Storyboarding in Media Education." Media Psychology Review, 2022.
5. "The Future of Storyboarding in the Digital Age." Adobe Creative Blog, 2023.
6. https://blog.adobe.com/en/publish/2023/05/10/storyboarding-future-of-visual-planning

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
: DOI :

# நாககுமாரான் காவியத்தில் பஞ்சமி கதைகள்

(இர.சண்முகலட்சுமி, முனைவர். ககமலா)

**Date of submission : 28-01-2026 Date of acceptance : 28-01-2026**
**Date of Publication: 30-01-2026**
**Corresponding auther's Name :Dr.K.Kamala**
**Email : kamaladr.sl@velsuniv.ac.in**
**Pages : 46 - 48**

முன்னுரை

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களுள் ஒன்றோ, சிலவோ குறைந்து பெருங்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டு வருவது சிறுகாப்பியமாகும். ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான நாக குமார காவியம் என்னும் காப்பியத் தலைவன் நாககுமாரான் காவியத்தில் பஞ்சமி கதைகள் பற்றி வெளிப்படுத்துவது இக்கட்டுரை.

**உதயணன் தெய்வ யாழை பெறுதல்**

அந்நிலையில் பிரம்ம சுந்தர முனிவருக்கு தேவேந்திரனால் பரிசாக வழங்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய கோடவதி என்னும் யாழை அம்முனிவர் உதயணனுக்கு பரிசாக வழங்கினார் யானை முதலான விலங்குகளை மயக்கும் தன்மை கொண்ட பெருமை வாய்ந்தது அந்த யாழ் ஒரு நாள் காட்டில் உதயணன் தெய்வத்தன்மை பொருந்திய யானை ஒன்றைக் கண்டான் அவன் கோடாவதியான யாழை வாசிக்க யானை அந்த இசையில் மயங்கி அவன் முன் முழுங்காலிட்டு வணங்கியது அவன் யானை மீது அமர்ந்து தவப்பள்ளியை அடைந்தான்

தெய்வயானை மறைந்து போதல்:-

**"மன்னிய தெய்வயானை மாயமாய் மறைந்து போகல்**
**மன்னனும் மனம் தளர்ந்து மணி இழந்த அரவு போலத்**
**துன்னிய சோக மேவித் துயர் எழுதி த் தேடுக என்றான்**
**பன்னரும் சேனை சென்று பாரெங்கும் தேடிட்டு அன்றே"-**

உஞ்சைக்காண்டம், (ப.எண்-36)

சேதி வத்துவ என்னும் இரு நாடுகளையும் சிறப்பாக ஆட்சி நடத்தி வந்த உதயணன் ஒரு நாள் தன் மனம் மகிழும் படியாக நாடகங்களை கண்டு மெய் மறந்ததால் யானையின் நிபந்தனையை மறந்து யானைக்கு முன்பே உணவு உட்கொண்ட அதனால் தேவையான மறைந்து போயிற்று உடனே அந்த யானை தேடிக் கொண்டு வருமாறு படைவீரர்களுக்கு கட்டளையிட்டான்.

பிரச்சோதனன் சூட்சுமம்:-

**"ஊனமுற்றோர் மேல் யூகிபோர்போனதும்**
**ஆனைபோக அரசன் இரக்கமும்**
**கான யானை காட்டிப் பிடிப்பதும்**
**மானவேலவர் மந்திரித்து ஒன்றின்"-**

உஞ்சைக்காண்டம் (ப.எண்-38, 39)

இந்த நிலையில் அவந்தி நாட்டு வேந்தன் பிரச்சோதனன் என்பான் தனக்குத் திறை செலுத்தவில்லை என்ற காரணத்தால் உதயணனை சிறைபிடிக்க எண்ணினான் துன் அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து பின்னர் அரக்கு மரம் துணி தோல் மற்றும் பிற பொருட்களால் ஆன பொய்(மாய) யானை ஒன்றை உருவாக்கினான் அந்த யானைக்குள் போர் வீரர்களையும் ஓர் கருவிகளையும் மறைத்து வைத்திருந்தான் மாயை யானையை அறிந்த உதயணன் கோடாவதி என்ற யானை இசைக்கத் தொடங்கினான் அப்போது அந்த யானை அழிந்து போர் வீரர்கள் வெளிப்பட்டனர்.

**இர.சண்முகலட்சுமி, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**முனைவர் க.கமலா, (நெறியாளர் )பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.**

**"சிலந்தி நூலில் சிறத்தர் நற்சிங்கம் போல**
**அலங்கல் வேலினான் பண்புடை யூகிக்கே**
**நலங்கொள்கையில் நின்று கொடுத்தனர்"-**

உஞ்சைகாண்டம்( ப. எண் 45,46)

சிலந்தி நூலால் கட்டுண்டு நிற்கும் ஒரு சிங்கத்தைப் போன்றவன் ஆனான் மிகுந்த கோபம் கொண்ட உதயணன் பகைவர்களின் நான் படைகளையும் அழித்தான் . இருப்பினும் இறுதியில்--- அவனுடைய கூறுவாள் ஒடிந்து போன நிலையில் அவன் படைக்கருவி ஏதேனும் இல்லாமல் நின்ற போது பகைவர்கள் அவனைச் சுற்றி வளைத்து அவன் கைகளை வெள்ளை துணியால் புறத்தே கட்டினர். கட்டுண்ட உதயணன் யூகிக்கு மட்டும் புரியும் படியான குறிப்பு மொழிகளால்" ஓர் ஓலையை" சேர்க்கும்படி கூறினான்- இந்நிலையின் சாலங்காயனும் அவனுடைய வீரர்களும் உதயணனை ஒரு தோலில் ஏற்று அவந்தி நாட்டின் தலைநகரான வஞ்சை நகருக்கு கொண்டு வந்தனர்

உதயணனை சிறையில் இருந்து மீட்டல்:-

**"மன்னன் வந்து இறங்கி யூகி மரித்தனனென் வார்த்தையை**
**பன்னி எங்க சைம்முறைபரப்பி வையகம் தன்னில்**
**உன்னி யூகி கான் விலகிச் ஒன்னெரிப்படுத்தனன்"**

உஞ்சைக்காண்டம்-(ப.எண்-47)

உதயணன் சிறைப்பட்டான் என்பதை ஓலை மூலம் உணர்ந்த யூகி பெரிதும் வருந்தினான் சூழ்ச்சியை சூழ்ச்சியால் தான் வெல்ல வேண்டும் என்று அவன் துணிந்தான் தகுந்த ஏற்பாடுகளை திட்டமிட்டு செய்த பின்னர் மன்னன் உதயணன் சிறைப்பட்டதால் மனம் உடைந்த யூகி இறந்துவிட்டான் என்று ஒரு பொய் செய்தியை நாடெங்கும் பரவச் செய்தான் பின்னர் தன்னை பிறர் அடையாளம் காண இயலாதவாறு மறைந்து மாறுவேடம் போட்டான் அந்நிலையில் பகை அரசர்கள் வத்துவ நாட்டைக் கைப்பற்றினர். என்பதையும் அவன் அறிந்து கொண்டான். பின்பு சிறையில் இருக்கும் உதயணனை காண அவந்தி நாட்டின் தலைநகரான வஞ்சை நகருக்குச் சென்றான் மாறுவேடத்துடன் சென்ற யூகி சிறைக் கோட்டத்தின் அருகே சென்று இளமையில் தானும் உதயணனும் பயின்ற இனிய இசையை குழல் வழி எழுப்பினான். அது கேட்ட உதயணன் யூகியின் வரவை அறிந்து மகிழ்ந்தான். பின்னர் யூகி தந்திரமாக அரண்மனைக்குள் புகுந்து நளகிரி என்ற யானைக்கு மதம் பிடிக்குமாறு செய்ய அக்களிறு கட்டுத்தறியை அறுத்துக் கொண்டு இடியென முழங்கி பெருஞ்சினம் கொண்டு வீதியில் ஓடி வெறியாட்டம் போட்டது கலங்கித் தவித்த நகர மக்கள் அரசனிடம் முறையிட்டனர். உதயணன் ஒருவனால் மட்டுமே அந்த மத யானையை அடக்க முடியும் என்று அமைச்சர் கூறினார்

**மதம் பிடித்த யானையை உதயணன் அடக்குதல்:-**

**" பருத்துப்பின் தொடர யானை பறவைகள் மற்றும் சூழப்**
**பெருந்திரு நடுவுள் தோன்றப்பீடுடைக் குமரன் தானும்**
**திரு வலித்தடக்கை வீணை சீருடன்பாடவோம்**
**மருவிற்று களிலும் கேட்டு வந்தடி பணிந்ததம்மா"-**

உஞ்சைக்காண்டம்(ப.எண்-59)

கோடாவதி என்ற யாழை இசைத்தான் யானை அவனுக்கு அடிபணிந்து அடங்கி நின்றது. அவன் அந்த யானை மேல் ஏறி நகர்வலம் வர அதைக் கண்டு அரசன் பிரச்சோதனன் பெரிதும் மகிழ்ந்தான் பின்னர் மன்னன் வேண்டுகோளுக்கு இணங்க அரசனுடைய மைந்தர்களுக்கு படைக்கலப் பயிற்சியை பயிற்றுவித்தான்.

வீரத்தில் உயர்ந்த உதயணன்:-

**" வந்தவர் அம்பு மாறி வள்ளல் மேல் துவத்தானும்**
**தந்தனுமேவிச் சாராத் தரத்தினால் விலக்கிட பின்னும்**
**வெந்திறல் வேடர் வில் நாண் வெந்நுனைப்பகழி வீழ**
**நந்திய சிதைவு வளைத்து நன் பிறை அம்பின்**
**எய்தவன்"**

-உஞ்சைக்காண்டம்-(ப.எண்-67)

உதயணனை வேடர்கள் சூழ்ந்து கொண்டு அம்பு மாறி பொழிந்தனர்; வீரத்தில் உயர்ந்த உதயணன் அவர்களின் வில்களும் அம்புகளும் நிலத்தில் விழும் படி செய்தான் தோல்வியால் வேடர்கள் சிணந்து போயினர்.

**வீரத்தால் பது மகாபதியை மணத்தல்**

தரு சகனின் பகை அரசர்களை உதயணன் போரிட்டு வென்றான் அதனால் மகிழ்ந்த தருசகன் தன் தங்கை பதுமகாபதியை வேள்வி முறையில் உதயணக்குத் திருமணம் செய்து கொடுத்தான் அவன் தன் தங்கைக்கு நிரம்பச் சீதன வழங்கி நாற்படைகளையும் பரிசாக வழங்கினான்.

**வெற்றி வாகை சூடிய உதயணன்:-**

**"மாற்ற வன்படை முறிந்தென மன்ன வன்படை**
**தோற்ற மன்னன் வந்தீர்த்தனன் தூய காளை தன் வாளினால்**
**மாற்றலன் தனைக் கூற்றுண வண்மையிவ் விருந்தார்கென**
**ஏற்ற வகையில் இட்டனன் இலங்கு வத்தவ ராசனே".**

மகத காண்டம்-(ப.எண்-90)

பெரும்படை சூழத் தருசகன் உதயணனுக்கு அன்புடன் விடை கொடுத்து அனுப்பி வைத்தான் உதயணன் அந்நாட்டு எல்லையை அடைந்தபோது படை வீரர்கள் சூழ வகை தந்து அவனை வணங்கினர். அவர்கள் அனைவரும் கௌசாம்பி நகரத்தின் புறத்தே படைவீடு அமைத்து தங்கினர் பகைவரைக் கூற்றுவனுக்கு இரையாக்கி உதயணன் வெற்றிச் சிறப்போடு பெருமை வாய்ந்த கௌசாம்பி நகருக்குள் நுழைந்தான் நகர மக்கள் பெரு மகிழ்ச்சியோடு வாழ்த்துப் பாடி அவனை வரவேற்றனர்.

**முடிவுரை:-**

இவ்வாறு உதயணன் வீரத்தில் சிறந்து பல வெற்றிகள் குவித்து தமிழ் மண்ணிற்கு பெருமை சேர்த்து பின்னரும் மரபினர்களும் திரும்பி பார்க்கும் வண்ணம் சிறந்து வாழ்ந்தனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் உணர முடிகிறது இவையே உதயணகுமார காவியத்தில் உதயணனுடைய வீரத்தை பற்றி இக்கட்டுறையில் கூறப்பட்டுள்ளது.

---

**துணை நூற் பட்டியல்**

உதயண குமார காவியம்- அப்பாண்டை ராஜன்
நேமி பாஸ்கர தாஸ்
தமிழ் இலக்கிய வரலாறு- டாக்டர் பூவண்ணன்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.